නිපුණතා සංවර්ධන වෘත්තීය අධ්‍යාපන පර්යේෂණ හා නව නිපැයුම් රාජ්‍ය අමාත්‍යංශය

திறன் அபிவிருத்தி, தொழிற்சார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் இராஜாங்க அமைச்சு

State Ministry of Skill Development Vocational Education Research and Innovation





වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
Annual Report

2022

ශ්‍රී ලංකා වෘත්තීය පුහුණු අධිකාරිය

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

Vocational Training Authority of Sri Lanka



நிறுவனம்	-	இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
அமைச்சு	-	கல்வி அமைச்சு, திறன் அபிவிருத்தி, தொழிற்சார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள பிரிவு
விலாசம்	-	"நிபுணதா பியச இல:354/2 எல்விட்டிகல மாவத்தை நாராஹேன்பிட்டி கொழும்பு 05.
மின் அஞ்சல் முகவரி	-	info@vtasl.gov.lk
இணையத்தளம்	-	www.vtasl.gov.lk
கணக்காய்வாளர்கள்	-	தலைமை கணக்காய்வாளர் அதிபதி தலைமை கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்
வங்கியாளர்கள்	-	மக்கள் வங்கி

உள்ளடக்கம்

நோக்கு மற்றும் பணிக்கூற்று	03
பணிகள்	04
சமர்ப்பணம்	05
அறிமுகமும் கட்டமைப்பும்	06
பணிப்பாளர் சபை	07
அமுலாக்கள் கடமைகள்	08
நிறுவனம் கடந்துசென்ற திருப்புமுணைகள்	10 -11
பணிப்பாளர் சபை அறிக்கை	12
2022 ஆம் ஆண்டின் வெற்றிகள்	12-14
2023 ஆண்டிற்கான நிகழ்ச்சிகளும் இலக்குகளும்	15-16
மேல் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பதவியணி	17-19
பதவியணி கட்டமைப்பு	20-23
தொழிற் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை அமுல்படுத்துவதனால் இளைஞர்யுவதிகளுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்குதல்	24-27
தொழிற் பயிற்சி நிலையங்களின் விஸ்தரிப்பு	28-30
தொழிற்பயிற்சி பரீட்சைகள் நடாத்துதலும் மதிப்பீடுகளும்	31
தொழிற் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும்	32
தொழிற் அமர்த்தல்	33-35
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்	36
தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சிகள் நடாத்துதல்	37
சவால்கள்	37
தணிக்கை மற்றும் நிர்வாகக் குழுக்களின் செயல்திறன்	38-40
நிதிக்கூற்று அறிக்கை	41-76
கணக்காய்வளர் நாயகத்தின் அறிக்கை	77-86
கணக்காய்வளர் நாயகத்தின் அறிக்கைக்கான கண்காணிப்பு அறிக்கை	87-93

நோக்கு

உலகளாவிய தொழிற்சந்தையின் தேவைகளை பூர்த்திசெய்கின்ற இலங்கையின் செயற்திறன்மிக்க மற்றும் படைப்பாற்றல் மிக்க தொழிற்சார் பயிற்சிகளை வழங்குகின்ற முன்னிலை நிறுவனமாக திகழ்வது.



பணிக்கூற்று



தொழிற் பயிற்சி மற்றும் கல்வித்துறையில் நவீன வழிமுறைகள் மற்றும் தொழிநுட்பங்கள் ஊடாக நபர்களுக்குள் திறன்களை வளர்த்து உலகளாவிய பயிற்றப்பட்ட தொழில் கேள்வியை பூர்த்திசெய்யும் பொருட்டு வசதிகளை ஏற்படுத்தல்.

எமது சேவைகள் மற்றும் வசதிகளை உயர்ந்த தரத்தில் வைத்தவண்ணமும் சர்வதேச தொழிற் முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு நாங்கள் இந்த பணியை சிறப்பாக்கிக்கொள்வோம்.

பணிகள்

01 தொழிற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தயாரித்தல் மற்றும் தொழில் அமர்த்தலுக்கு தேவையான திறமைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தகைமைகளுடைய இளைஞர் யுவதிகளுக்கு தேவையான தொழிற் பயிற்சியொன்றை நேரடியாகவோ அரச அல்லது தனியார் துறை முகவர் நிறுவனமொன்றின் மூலம் பெற்றுக்கொடுத்தல்.

02 தேசிய தொழில் பரீட்சைகள் நடாத்துதல் மற்றும் தொழிற் பயிற்சி வழங்கப்பட்டுள்ள பயிலுநர்களுக்கு சான்றிதழ் வழங்குதல் மற்றும் வேறு பரிசுகள் வழங்குதல்

03 தொழிற் பயிற்சித் திறன் சம்பந்தமாக ஆராய்ச்சிகளை நடாத்துதல் மற்றும் தொழிற் பயிற்சிகளை அபிவிருத்தி செய்தல்.

04 தொழிற் பயிற்சி நிலையங்களின் உரிய தரத்தை பேணுவதற்காக அந்த நிலையங்களை பரிசோதித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

05 அதிகார சபையினால் தொழிற் பயிற்சிகளுக்கு வழங்கப்பட்ட வசதிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றுக்காக கட்டணங்கள் அல்லது வேறு அறவீடுகள் விதித்தல் மற்றும் அறவிடுதல்.

06 அதிகார சபையின் விடயங்களுக்கு தேவையான ஏதேனும் அசையும் மற்றும் அசையா சொத்தொன்றை கையகப்படுத்தல், ஏற்றல், குத்தகைக்கு பெறுதல் அல்லது கொடுத்தல், அடகு வைத்தல், வாடகைக்கு பெறுதல் அல்லது கொடுத்தல்.

07 அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான சகல ஒப்பந்தங்களையும் கைச்சாத்திடுதலும் நடைமுறைப்படுத்துதலும்.

08 அதிகார சபையினால் தொழிற் பயிற்சிகளுக்காக தேர்ந்தெடுக்கப்படுகின்ற பயிலுநர்களுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்கு சேவை பெறுநர்களுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதல்.

09 அதிகார சபையின் பயிலுநர்களுக்கு பயிற்சிகளை வழங்க உத்தேசிக்கும் ஒவ்வொரு சேவை பெறுநரும் அப்பயிற்சிக்கு முன்னர் பயிலுநருடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும் என்பதாகவும் அந்த ஒப்பந்தம் அதிகார சபையில் பதிவுசெய்யப்படும் என்பதற்கு பொறுப்பாகவும் இருத்தல் வேண்டும்.

10 தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.

சமர்ப்பணம்

கௌரவ கலாநிதி சுசில் பிரேமஜயந்த அவர்கள்,
கல்வி அமைச்சர்,
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.

கௌரவ அமைச்சர் அவர்களே,

வருடாந்த அறிக்கை - 2022
இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை

1995 ஆம் ஆண்டு 12ஆம் இலக்கம் கொண்ட இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்கம் கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2)சீ பிரிவின் பிரகாரம் 2022 ஆம் வருடத்தில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன்.

இப்படிக்கு
உண்மையுள்ள

ஏயார் வயிஸ் மார்ஷல் பிரசன்ன ரணசிங்க (ஓய்வுபெற்ற)
தலைவர்.்பிரதம நிறைவேற்று அதிகாரி
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை

அறிமுகம் மற்றும் கட்டமைப்பு

1995 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை சட்டத்தின் 5 வது பிரிவின் படி நியமிக்கப்படும் தலைவர், உபதலைவர், உட்பட அங்கத்தினர் 12 பேரைக.

பணிப்பாளர் சபை (2022.10.09 தொடக்கம் 2022.12.31 வரை)

- திரு.ஏ.ரி.உபாலி கெப்பிட்டிபொல
  தவிசாளர்
  இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை
- செல்வி ருவினி தர்மசிரி
  உப தவிசாளர்
  இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை
- திரு.பி.கே.பிரபாத் சந்திரகீர்த்தி
  தொழில் ஆணையாளர் நாயகம்
  தொழில் திணைக்களம்
- திரு.ருசிர அமரசேகர
  தவிசாளர்
  தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
- திரு.யூ.என்.மல்லவாரச்சி
  மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (பதில்)
  நிதி பொருளாதார விவகாரங்கள் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
  (2022.12.23 வரை)
- திரு.ஆர்.ஏ.எல்.உதய குமார
  அரச தொழில்முயற்சிகள் திணைக்களம்
  (2022.12.23 தொடக்கம்)
- திரு.சமன் வடுகே
  மேலதிக செயலாளர்
  விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு. (2022.12.18)
- திரு.விந்திக்க பிரியரத்ன
  பணிப்பாளர்
  (கைத்தொழில் அபிவிருத்தி) கைத்தொழில் மற்றும்
- பெறுகை முகாமைத்துவ அமைச்சு.
  (2022.12.18 வரை)
- திருமதி.பத்திரா விதானகே
  பணிப்பாளர்
  கல்வி அமைச்சு (2022.12.19 வரை)
- திரு.ஜினேந்திர மஞ்சுள குணரத்ன
  முன்னாள் பிரதி பிரதம நிறைவேற்றுனர்
  சொப்லொஜிக் பினான்ஸ் பீ.எல்.சி.
- திரு.எஸ்.ஜி.லக்ஷ்மன் பெர்னாந்து
  முன்னாள் சிரேஷ்டப்
  பணிப்பாளர் ஜோர்ஜ் ஸ்டூவர்ட் மற்றும் கம்பனி
- திரு.கனிஷ்க திலகரத்ன
  தவிசாளர்
  முறுயுபு ஹோல்டின் தனியார் நிறுவனம்
- திரு.கே.பீ.மனுகம
  பணிப்பாளர்
  கல்வி அமைச்சு
- திரு.சதுர டி சில்வா
- திரு.ஜே.எம்.சனத் பண்டார ஜயசுந்தர
  Consultant and Corporate Sectretar
  நைள தனியார் நிறுவனம்.

பணிப்பாளர் சபை (2022.01.01 தொடக்கம் 2022.10.05 வரை)

- திரு.எரங்க பஸ்நாயக்க
  தவிசாளர்
  இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை
- திரு.மஹேஸ் ஆரியரத்ன
  உப தவிசாளர்
  இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை
- திரு.தரங்க நலீன் கம்லத்
  தவிசாளர்
  தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
- திரு.பி.கே.பிரபாத் சந்திரகீர்த்தி
  தொழில் ஆணையாளர் நாயகம்
  தொழில் திணைக்களம்
- திரு.ரி.எம்.ஜே.பண்டார
  பணிப்பாளர்
  நிதி பொருளாதார விவகாரங்கள் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
- திரு.பியதாச எச்.மாரம்பகே
  பிரதானி, கிரீன் இன்ஜினியரிங் என்ட் டெக்னோலொஜி நிறுவனம்
- திரு.சமன் வடுகே
  மேலதிக செயலாளர்
  விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
- திரு.விந்திக்க பிரியரத்ன
  பணிப்பாளர்
  கைத்தொழில் அபிவிருத்தி கைத்தொழில் மற்றும் பெறுகை முகாமைத்துவ அமைச்சு.
- திருமதி.பத்திரா விதானகே
  பணிப்பாளர்
  கல்வி அமைச்சு
- கலாநிதி(திருமதி) மனிஷா பர்தா கொடிதுவக்கு
  பணிப்பாளர்- லீகல்ஸ்நெஸ்ட் தனியார் நிறுவனம், வெளி விரிவுரையாளர் -மொறட்டுவை பல்கலைக்கழகம், ஜயவர்தன பல்கலைக்கழகம், SLIDA, SLIIT.
- திரு.சஜீவ சுரவீர
  பொது முகாமையாளர் (மனிதவளம்)
  மக்லர்னஸ் ஹோல்டின்ஸ் நிறுவனம்
- வைத்தியர் கே.ஏ.எச்.டி.கே.கொள்ளுரே

2022 ஆம் ஆண்டினுள் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் 11 நடாத்தப்பட்டுள்ளது



அமுலாக்கள் கடமைகள்

பயிற்சிப் பிரிவு

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் அமுலாக்கள் செயற்பாட்டின் இது முன்னணிப் பிரிவாகுவதுடன் நாடளாவிய ரீதியில் நிறுவப்பட்டுள்ள பயிற்சி நிலையங்களை நவீனமயப்படுத்தி, கல்விசார் பதவியணி மற்றும் பௌதீக வளங்களைத் தயாரித்து வருகின்றது. இந்தப் பிரிவின் கீழ் நேரடியாக பயிற்சிகளுக்காக பங்களிப்புச் செய்கின்ற 1238 பணியாளர்கள் இருக்கின்றனர். (மாவட்டங்களும் உள்ளடங்களாக).

நிருவாகப் பிரிவு

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் சேவைகளுக்குத் தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களை முகாமைத்துவம் செய்வது நிருவாகப் பிரிவின் பிரதான கடமையாகும் என்பதுடன் அதிகார சபைக்கு சொந்தமான ரூபா பில்லியன் 7 அளவில் பெறுமதியான பெறுமதியுடன் அதிகாரசபையின் பௌதீக வளங்களைப் பேணுவதன் மூலம் உட்கட்டமைப்பு முகாமைத்துவம் நிறைவேற்றப்படுகிறது. 604 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

ரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டு பிரிவு

பரீட்சைகள் மற்றும் மதிப்பீடுகளை நடத்துவதற்கு பொருத்தமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைத் தயாரித்தல், சம்பந்தப்பட்ட பயிற்றுனர்கள்.்.பரீட்சைமேற்பார்வையாளர்கள் .். ஊழியர்கள் ஆகியோருக்கு பயிற்சிகளை வழங்கி தொழிற் பயிற்சி நிலையங்களில் நடத்தப்படும் ஏஞ இழேெ ஏஞ பாடநெறிகளுக்காக முன் மதிப்பீடுகள் மற்றும் இறுதி மதிப்பீடுகளை திட்டமிடல், நடாத்துதல், ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகிய விடயங்கள் இந்தப் பிரிவினால் செய்யப்படும்.

தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஊக்குவித்தல் பிரிவு

நாடளாவிய ரீதியில் நிலைகொண்டுள்ள தொழிற்கல்வி வழிகாட்டல் உத்தியோகத்தர்களினால் பிரதேச, மாவட்ட, தேசிய மட்டத்தில் தொழிற்பயிற்சி தொடர்பான தொழில் வழிகாட்டல் செயற்பாடுகளை முன்னெடுத்தலும், இளைஞர் யுவதிகளை பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக மேலதிக பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு அனுப்புவதே இதன் பிரதான பணியாகும்.

திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

இது அமுலாக்க செயல்பாடுகளுக்கு பங்களிக்கின்ற பிரிவாகும். நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான நீண்ட கால மற்றும் குறுகிய கால திட்டங்களை தயாரித்தல் மற்றும் முன்னேற்றத்தை பகுப்பாய்வு செய்து புதிய பாடநெறிகளை ஆரம்பிக்க தேவையான நடவடிக்கைகளை திட்டமிடுதல் மற்றும் தொழில்சார் பயிற்சிகளுக்குரிய பல்வேறு ஆராய்ச்சிகளை, சம்பவக் கற்கைகளை நடத்துதலும், புதிய செயற்றிட்டங்கள் தயாரித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் இந்த பிரிவின் முக்கிய பங்கு ஆகும். பிரிவில் இணைக்கப்பட்ட தகவல் முகாமைத்துவ முறைமை (MIS) முகாமைத்துவம் செய்வதன் மூலம் நிறுவன அபிவிருத்திற்கு தேவையான தரவுகளை பகுப்பாய்வு செய்தலும் புரியப்படுகின்றது.

கணக்கு பிரிவு

அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கோட்பாடுகளின்படி வருடாந்த மதிப்பீடுகள் மற்றும் கணக்குகளின் இறுதி கணக்கு அறிக்கைகளைத் தயாரிப்பதன் மூலம் நிறுவனத்தின் அனைத்து நிதி விவகாரங்களையும் இந்தப் பிரிவு கையாளுகிறது.

நிறுவனத்தினுள் கடந்து சென்ற திருப்புமுனைகள் - 1995-2020

ஆண்டு	திருப்புமுனைகள்
1995	■ இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையை நிறுவுதல்.
2000	■ நியாகமவை தேசிய தொழிற் பயிற்சி நிலையமாக மாற்றுதல். ■ இளைஞர்யுவதிகளை பயிற்றுவிப்பதற்கான வேலைவாய்ப்புப் பிரிவை நிறுவுதல். ■ GIZ உதவியுடன் தொழில் பயிற்சி அதிகாரசபை அதிகாரிகளை தொழிற் வழிகாட்டல் அதிகாரிகளாக பயிற்றுவித்தல்.
2005	■ சுனாமியின் போது இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் விசேட வேலைத்திட்டங்களை அமுல்படுத்தி நடமாடும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து பெரும் பங்களிப்பை வழங்குதல். ■ CEFE, SDP, ILO, CCF ஒத்துழைப்புடன் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடங்குதல்.
2010	■ மாற்றுத்திறனாளி (Disable) இளைஞர் யுவதிகளை தொழிற்பயிற்சிக்கு வழிநடத்தும் நோக்கத்துடன் நாரஹேன்பிட்டி தேசிய தொழிற்பயிற்சி நிறுவனத்தில் 3 பாடநெறிகளை ஆரம்பித்து மாற்றுத்திறனாளி இளைஞர் யுவதிகளுக்கான புதிய Profile திறப்பது. ■ கொரிய உதவியில் கட்டப்பட்ட நியாகம தேசிய தொழிற்பயிற்சி நிறுவனத்தை ஆரம்பித்தல்.
2015	■ டிப்ளோமாதாரிகளுக்கான சான்றிதழ் வழங்கும் விழா ஆரம்பம் (2017) ■ கொரிய உதவியில் கட்டப்பட்ட ஒருகொடவத்த தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தின் திறப்பு விழா.(2018). ■ BMICH இல் நடைபெற்ற EDEX தொழில் சந்தை மற்றும் கண்காட்சியில் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையை பிரதிநிதித்துவப் படுத்தி, தொழிற்கல்வி வழிகாட்டல் பிரிவினால் முன்வைக்கப்பட்ட கண்காட்சி கூடத்திற்கு Best Social Impact Stall விருதை ■ துறைசார் திறன் விருத்தி திட்டத்தின் கீழ் 12 பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்.
2020	■ டிஜிட்டல் தொலைக்காட்சி சேனலை (Skill TV – You Tube) ஆரம்பித்தல் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபைக்கான புதிய இணையதளத்துடன் ஆழடிடைந யூீ அறிமுகம் செய்தல். ■ ஒரு முன்னோடி திட்டமாக நாரஹேன்பிட்டி தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தில் Smart Class room நிறுவுதல். ■ "Hotel School – “அஹங்கம" ஐ தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு சொந்தமாக்கிக் கொள்ளல்.



1995 இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையை நிறுவுதல்"



கொரியா நிதியுதவியின் கீழ் புரியப்பட்ட நியாகம தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம்



கொரியா நிதியுதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஒருகொடவத்தை தேசிய தொழிற்பயிற்சி நிறுவனம் - 2018



"Hotel School – "அஹங்கம" தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு கையகப்படுத்திக் கொள்ளல்.



Smart Classroom பயன்படுத்தி கற்கை விடயங்களை மேற்கொள்ளல



டிப்ளோமாதாரிகளுக்கு சான்றிழ் வழங்குதல்

சமூக நற்பணி சேவைகளில் ஈடுபடல்



சுனாமி அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணங்கள் வழங்குதல



கொவிட் நோயாளர்களுக்கு தேவையான கட்டில்களை தயாரித்தல்.

பணிப்பாளர் சபை அறிக்கை

1995 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை சட்டத்தின் கீழ் 1995 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட தேசிய தொழிற் பயிற்சி நிறுவனங்கள் 08, மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்கள் 22 மற்றும் பிராந்திய தொழிற் பயிற்சி நிலையங்கள் 179 மூலமும் பதிவுசெய்யப்பட்ட சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு நிலையங்கள் 03 இனால் அமைக்கப்பட்ட தொழில் பயிற்சி நிலையங்கள் 212 வலையமைப்பின் ஊடாக தொழில் பயிற்சி நிகழ்ச்சிகள் 1583 முழுநேர அடிப்படையிலும் 368 பகுதிநேர அடிப்படையிலும் நடாத்தப்பட்டு இளைஞர் யுவதிகள் 34999 க்கு தனது சேவையை வழங்குவதற்கு முடிந்துள்ளது

2022ஆம் ஆண்டில் பெற்ற வெற்றிகள்

1. 2022 ஆம் ஆண்டில் நாடுபூராகவும் அமைந்துள்ள பயிற்சி நிலையங்கள் 212 இல் முழுநேர அடிப்படையிலும் பகுதிநேர அடிப்படையிலும் பயிற்சிக்காக இளைஞர் யுவதிகள் முறையே 27688 மற்றும் 7311 என 34999 பேர்களை இணைத்துக்கொள்வதற்கு முடிந்தது. மொத்த இணைக்கப்பட்ட எண்ணிக்கையின் 83மூ சதவீதமாகும் என்பதுடன் 120 பாடநெறிகளுக்கு ஆலோசகர்களை இணைத்துக் கொள்ள முடியாதுப் போன காரணத்தால் ஆரம்பிக்க முடியாதுப் போனது.

2. தேசிய தொழிற் தகைமை (NVQ) சான்றிதழ்கள் 17734 மற்றும் தேசிய தொழில் தகைமை அல்லாத (Non NVQ) சான்றிதழ்கள் 2356 மற்றும் முந்திய அறிவை மதிப்பிடும் (RPL) இன் கீழ் சான்றிதழ் 3006 என 23096 சான்றிதழ் வழங்குதல்.

3. 2022 ஆம் ஆண்டினுள் தொழிற் பயிற்சி வழிகாட்டல் நிகழ்ச்சிகள் 1779 நடாத்தி பாடசாலைப் பிள்ளைகள், பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் உட்பட 88140 பேர்களுக்கு அறிவுறுத்துதல்.

4. தேசிய தொழிற் தகைமை (NVQ) Level 05 மற்றும் 06 டிப்ளோமாதாரிகள் 353 பேர்களுக்கு 03 ஆவது முறையாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த கருத்தரங்கு மண்டபத்தில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

5. இடைக்கால வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல்.

   - நுண் பரிமாண சுயதொழில்/வாழ்வாதார தொழில்களில் ஈடுபட்டுள்ள மக்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடாத்தப்படும் விசேட பயிற்சி நிகழச்சிகளின் கீழ் 21 மாவட்டங்களில் குறுங்கால பயிற்சிகள் 37 ஊடாக 612 பேர்களுக்கு பயிற்சி அளித்தல்.
   - முந்திய அறிவை அடிப்படையாகக் கொண்ட (RPL) மதிப்பீட்டு முறையின் கீழ் சான்றிதழ்கள் 619 வழங்குதல்.

6. தோழிற் பயிற்சி பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் புதிய தொழிநுட்பம் பயன்படுத்தப்படுதல் நோக்கில் அரச மற்றும் தனியார் பிரிவு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுதல்.

   - ILO திட்டத்தின் நிதியுதவியின் கீழ் ஜப்பான் பாடநெறிகள் 06 மற்றும் முதயோரை கவனிக்கும் பாடநெறிகள் 06 ஆரம்பிக்கப்பட்டு முறையே 525 பேர்களுக்கும் 170 பேர்களுக்கும் பயிற்சி அளித்தல். இதற்கு மேலதிகமாக 27 பாடநெறிகளின் கீழ் முந்திய அறிவை மதிப்பிடும் (RPL) 653 பேர்களுக்கு சான்றிதழ் வழங்குதல்.
   - S4IG (Skills for Inclusive growth) இந்த திட்டத்தின் கீழ் சமையல்கலை பாடநெறிகள், தொழில்சார்ந்த சமையல்கலை பாடநெறிகளாக மேம்படுத்துவதற்கு கீழ்க் காணும் வகையில் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கதுருவெல மற்றும் அஹங்கம சமையல்கலை செய்முறை வேலைத்தளங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சமையல்கலை ஆலோசகர் 40 பேருக்கு பயிற்சி அளித்தல்.
- 21 ஆங்கில ஆலோசகர்களு துறைகளில் பயன்படுத்தும் ஆங்கிலம் பற்றி பயிற்சி அளித்தல்.
- கதுருவெல அஹங்கம அபேகொட மற்றும் குச்சவெளியில் இயங்கும் 4 சமையல்கலை பாடநெறிகளுக்கு அனுசரணை வழங்குதல்.
- Supreme Chef நிகழ்ச்சிக்கு 20 பயிலுனர்களை அனுப்புதல், அதில் போட்டித்தொடரின் இறுதிப் சுற்றுக்காக 12 தகுதி பெற்றனர் மற்றும் அதில் முதலாம் இடத்தையும் நான்காம் இடத்தையும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு கிடைத்துள்ளது. இதற்கு மேலதிகமாக 6 பேருக்கு Cinnamon ஹோட்டலில் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது

- TANTRI நிறுவனத்துடன் இணைந்து வெல்டிங் துறையில் பயிற்சி பெற்றவர்களை திறன்னொண்ட தொழில்நுட்பவலர்களாக உருவாக்குவதற்கு பணியிடத்தில் பயிற்சி மூலம் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துதல். இதுவரை 22 பயிற்சியாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- தேசிய இளைஞர் படையுடன் இணைந்து ஜோர்தானில் ஆடைத் துறையில் இலங்கை இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க ஏற்பாடு செய்தல். இதுவரை 78 பயிற்சியாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- லிமா கிரியேஷன் பிரைவேட் நிறுவனத்துடன் இணைந்து, தச்சுத் தொழிலில் வேலை செய்யும் பயிற்சியின் மூலம் முறையான அறிவு மற்றும் திறன்களை வழங்குவதன் மூலம் பயிற்சியாளர்களை தொழில்முறை தொழில்நுட்பவலர்களாக மாற்றுதல். இதுவரை 20 பயிற்சியாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- Gamma Pizzakraft தனியார் நிறுவனத்துடன் இணைந்து அதன் ஊழியர்களுக்கான RPL முறையை ஒருங்கிணைப்பு செய்தல். இதுவரை 43 RPL செய்யப்பட்டுள்ளன.
- Synex சர்வதேச தனியார் நிறுவனத்துடன் இணைந்து பணியிட பயிற்சியின் மூலம் பஹலயகொட நிலையத்தில் மின் தொழிநுட்பத் துறையில் பயிற்சி பெறுபவர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துதல். இதுவரை 35 பயிற்சியாளர்கள் பயனடைந்துள்ளனர
- Printcare Universal Private Limited நிறுவனத்துடன் இணைந்து அச்சுப் பொதியிடல் துறையில் திறமையான நிபுணர்களை உருவாக்குவதற்கான அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துதல். இதுவரை 24 பயிற்சியாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- Cinnamon Hotels and Resort இணைந்து கருவாப்பட்டை மற்றும் ஹோட்டல் சார்ந்த பணியாளர்களுக்கு RPL முறையை அறிமுகப்படுத்தல். இதுவரை முந்திய மதிப்பீடுகள் 7 புரியப்பட்டுள்ளது.
- ரேன்போ லங்கா பயிற்சி நிலையத்துடன் இணைந்து ஏவுயு பயிற்சி நிலைங்களில் பயிற்சியாளர்களை வேலைக்கு அமர்த்தும் நோக்கத்தில் ஜப்பானிய மொழி மற்றும் கலாச்சாரத்தில் திறன்களை வழங்க ஒப்பந்தம் கைச்சாத்திடுதல்
- Sterling Automobile Lanka (Pvt) Ltd இணைந்து மோட்டார் தொழிநுட்பத் துறையில் பயிற்சியாளர்களுக்கு தொழில் பயிற்சி வழங்குதல். இதுவரை 30 ஆலோசகர்கள் பயனடைந்துள்ளனர்.
- R-Pac Printcare Lanka (Private) Ltd; இணைந்து திரை அச்சிடல் இயந்திர செயற்பாட்டாளர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்தி, அவர்களை அச்சு பொதியிடல் துறையில் திறமையான நிபுணர்களாக மாற்றுதல். இதுவரை 15 பயிற்சியாளர்கள் பயனடைந்துள்ளனர்.
- திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் பாதிப்புக்குள்ளாகக் கூடிய குழுக்களுக்காக ஊடாடன குரனெ நிறுவனத்துடன் இணைந்து வேலை வாய்ப்பை

உருவாக்குவதற்கான மூன்று புதிய பாடநெறிகளை ஆரம்பித்தல் இதுவரை 16 பயிலுனர்கள் பயனடைந்துள்ளனர்.

- Swiss Hotel Management Academy (PVT) Ltd நிறுவனத்துடன் இணைந்து VTA மாணவர்களுக்காக செய்முறைப் பயிற்சி, ஆசிரியர்களுக்கு மேலதிக பயிற்சி மற்றும் அறிவைப் பெற்றுக்கொடுக்க ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுதல்.
    - பயிற்சியை வினைத்திறனாக்குவதற்கு மென்பொருள் பாடநெறிகளுக்கு பயிற்சிப் பொருட்களை வழங்குவதன் முன்னேற்றத்தை பிரதான அலுவலகத்தில் இருந்த மேற்பார்வை செய்யும் பொருட்டு System Develop செய்தலும் அமுல்படுத்தலும்.

7. இலங்கையில் காணப்பட்ட ஊழஎனை தொற்றுநோய் காலத்தில் பயிற்சியாளர்களின் வேலை பயிற்சியுடன் தொடர்புடையதாக மருத்துவமனைகளுக்கு 500 மருத்துவமனை படுக்கைகளை தயாரித்து நன்கொடையாக வழங்குதல்.

8. டிஜிட்டல் மேம்படுத்தல் திட்டத்தின் கீழ், தொலைக்காட்சி சேனல் (V TV- Youtube) ஊடாக தேசிய தொழிற் தகுதியின் (NVQ) 11 இற்கு Video Clips 157 தயாரித்தல் மற்றும் தொழில் பயிற்சிகளை பற்றி விழிப்புணர்வு ஏற்டுத்தும் 78 நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் பெற்றோர்கள், பாடசாலை குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் 5950 பேர்களுக்கு அறிறுத்துதல்.

9. கொமர்ஷல் வங்கியின் சமூக நற்பணித் திட்டத்தின் கீழ் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 15 ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பக் கற்கைநெறிகளில் பயிற்சியின் தரத்தை அதிகரிப்பதற்காக 15 கணினிகளை வழங்குதல்.

10. பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் சமூக நற்பணித் திட்டமாக அமுல்படுத்தப்படும் மோட்டார் தொழிநுட்ப வல்லுனர் NVQ Level 3 இல் அடையாளம் காணப்பட்ட 35 பயிலுநர்களுக்கு NVQ Level 4 ஐப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2023 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் இலக்குகளும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் கீழ், 2023 ஆம் ஆண்டு பகுதியளவிலான அரச நிறுவனமான இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு சவாலான ஆண்டாக காணப்பட்டது. இருக்கும் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்றவாறான தொழிற்படையொன்று, குறிப்பாக வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை இலக்காகக் கொண்டு மிகவும் விரைவாக பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்கு திட்டமிடப்படும்.

1. தொழிற் பயிற்சி 18 துறைகளின் கீழ் தேசிய தொழிற்படைக்கு பொருத்தமான திறன் நிறைந்த தலைமுறையொன்றை உருவாக்கும் நோக்கில் நாடுபூராகவும் தொழிற் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் 2962 நடாத்துவதன் ஊடாக முறையே முழுநேர மற்றும் பகுதிநேர அடிப்படையில் 33990 மற்றும் 8745 என பயிலுநர்களை 42735 பேர்களுக்கு பயிற்சி அளித்தல். இதற்கு மேலதிகமாக இளைஞர்களின் கேள்விக்கமைவான குறுங்கால பயிற்சி நிகழ்ச்சிகளை ஆரம்பிக்க திட்டமிடுதல்.

2. 2023 ஆம் தொடக்கம் தெரிவுசெய்யப்பட்ட 67 பயிற்சி நிலையங்களில் 49 பாடநெறிகளுக்காக பாடநெறிக் கட்டணம் அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. முறையான மதிப்பீடு முறையியலை பின்னபற்றி தேசிய தொழிற் தகைமை (NVQ) மதிப்பீடுகள் 25000 மற்றும் (NVQ) அல்லாத மதிப்பீடுகள் 1650வும் எனும் அடிப்படையில் 4000 மதிப்பீடுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4. தொழிற்முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சிகள் 50 நடாத்துதல்.

5. அரச மற்றும் தனியார்த்துறை தொடர்புகளின்படி (ii) நடாத்தப்படும் தொழில்வல்லுனர் திறமைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சிகள் 44 நடாத்துதல்.

6. தொழில் சந்தைகளை நடாத்துதல் மற்றும் கைத்தொழிற்களை பதிவுசெய்தல் ஊடாக பயிற்சிகளை முடிக்கும் பயிலுநர்களுக்கு உள்நாட்டு தொழில் மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களை முறையே 8075 மற்றும் 1100 என 9175 தொழிற்களை வழங்குதல

7. மிகவும், தரமிக்க தொழிற்பயிற்சி ஒன்றுக்காக கைத்தொழிற்சாலை பார்வையிடும் சுற்றுலாக்கள் 230 மற்றும் 20 தொழில் சந்தைகளை நடாத்துவதன் மூலம் பயிற்சியாளர்களை சிறப்பாக தொழிலில் அமர்த்தவதற்கு திட்டமிடல்.

8. பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுதவதிகளின் எதிர்காலத்தைத் திட்டமிடும் வகையில், You lead நிறுவனத்துடன் இணைந்து, தொழில் வழிகாட்டும் மொபைல் பேருந்துகள் (Career Bus) நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்.

9. பயிற்சி சூழல் மற்றும் பயிற்சி வகுப்புகள் பற்றிய புரிதலை வழங்கும் நோக்கத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு பத்து திறந்த நாட்களை (Open days) நடத்த திட்டமிடுதல்.

10. NVQ Level 3/4 சான்றிதழ் பெறுநர்களுக்கு மாவட்ட மட்டத்தலும் NVQ Level 5 டிப்ளோ மாதாரிகளுக்காக தேசிய மட்டத்திலும் சான்றிதழ்கள் வழங்கும் விழாக்களை திட்டமிடுதல்.

11. இணையத்தளம் ஊடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலகுவாகும் வகையில் NVQ பாடவிதானங்களைக் கொண்ட 70 பாடநெறிகள் உள்ளடங்கும் வகையில் VTA Youtube செனல் ஊடாக Video Uploading தொழில்பாடுகளை செய்தல்.

12. இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையில் பயிற்சிகளை பெற்று வெற்றிபெற்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழிலில் அமர்த்தப்பட்வர்கள் மற்றும் தொழில்முனைவோரை அடிப்படையாகக் கொண்டு Success Story 10 தயாரித்தல்.

13. ICT Level V பாடநெறியின்பாடவிதானங்கள் கைத்தொழிற் துறைக்கு பொருந்தும் வகையில் இற்றைப்படுத்தி அமுல்படுத்தல்.

14. தொழிற்பயிற்சி துறையில் புதிய போக்குகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கைத்தொழில்துறையின் புதிய போக்குகளை அடையாளம் காணும் நோக்கில் கைத்தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வுகள் 13 நடத்துதல்.

15. பதவியணி அபிவிருத்தியின் கீழ் கல்விசார் பதவியணியினர் 940 பேர்களுடன் கல்விசாரா பதவியணிகளுக்காக நிகழ்ச்சிகள் 12 நடாத்துதல்.

16. iii இன் கீழ் 2023 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு இருக்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள்.

- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
- இரத்தினக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
- கெமா பீஸா கிராப்ட் தனியார் நிறுவனம் மற்றும் சேவாலங்கா அமைப்பு
- சுவிஸ் டெக் அலுமினியம்
- லயா பீச் - வாத்தவை
- டில் பிலிம்ஸ் சர்வதேச தனியார் நிறுவனம்
- ஆதித்யா ஆயுர்வேத தனியார் நிறுவனம

எயார் வயிஸ் மார்ஷல் பிரசன்ன ரணசிங்க (ஓய்வுபெற்ற)
தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி,
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

மேல் மற்றும் சிரேஷ்ட நிலை முகாமைத்துவ பதவியணி

தவிசாளர்

1. திரு.ஏ.ரி.உபாலி கெப்பிட்டிபொல - 2022.10.06 தொடக்கம் இது வரை
2. திரு.எரங்க பஸ்நாயக்க - 2021.04.08 தொடக்கம் 2022.10.05 வரை

உப தவிசாளர்

1. செல்வி.ருவினி தர்மசிரி - 2022.10.06 தொடக்கம் இது வரை
2. திரு.மஹேஸ் ஆரியரத்ன - 2021.05.10 தொடக்கம் 2022.10.05 வரை

பணிப்பாளர் நாயகம்

திருமதி. எச்.சூலாங்கனி பெரேரா

பணிப்பாளர்கள்

1. திரு.பீ.வி.ஜி.நிரோஷன பெரேரா (மனிதவள அபிவிருத்தி மற்றும் நிருவாகம்) (2022.03.03 தொடக்கம் 2022.03.03 வரை)
2. திரு.யூ.கே.நந்த (பரீட்சைகளும் மதிப்பீடுகளும்) - 2022.12.31 தொடக்கம் ஓய்வுபெற்றள்ளார்.
3. திருமதி.எச்.எம்.எதிரிசிங்க (பயிற்சிகள்)
4. திருமதி.பீ.எச்.பீ.தமயந்தி (திட்டமிடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) 2022.05.23 தொடக்கம் கடமை நிநேவேற்றல்.
5. திருமதி.ஜே.ஏ.டி.எஸ்.நிசாமனீ (நிதி) (2019.12.19 தொடக்கம் பதில் கடமை)
6. திரு.சி.ஜே.விதான பத்திரண (தொழில் வழிகாட்டல் ஆலோசனை,தொழில் அமர்த்தல் மற்றும் மேம்படுத்தல்). (2021.09.29 தொடக்கம் பதில் கடமை.)
7. திரு.எம்.ஏ.நஜீட் அஹமட் (திட்டமிடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) (2020.05.21 தொடக்கம் 2022.05.22 வரை இரண்டாம்நிலை அடிப்படையில்)
8. திரு.டப்.ஏ.ரணவீர (மனிதவள மற்றும் நிருவாகம்)- 2022.03.02 ஆம் திகதி தொடக்கம் ஓய்வுபெற்றுள்ளார்.

பிரதம உள்ளக கணக்காய்வாளர்

1. திருமதி.ஜே.எம்.பீ.சிரிவர்தன (பதில் கடமை) - 2022.03.02 தொடக்கம் இதுவரை.
2. திரு.எல்.என்.ஜி.எஸ். குமார (கடமை நிறைவேற்றல்) - 2021.11.17 தொடக்கம் 2022.03.01வரை)

பிரதிப் பணிப்பாளர்கள்

1. திரு.ஈ.ஏ.டி.எஸ்.சேனாரத்ன
2. திரு.எச்.டப்.ரொஹான் பிரியந
3. திரு.டப்.ஜி.விஜேரத்ன (2022.10.05 தொடக்கம் ஓய்வுபெற்றுள்ளார்.)
4. திரு.ஏ.எம்.ரீ.எஸ்.ஆடிகல
5. திரு.வீ.கனகசுந்தரம்
6. திரு.ரீ.வினோதராஜா
7. திரு.ஜி.என்.அபேசிங்க
8. திரு.டி.ஏ.எஸ்.அத்துகோரல
9. திரு.ஆர்.எம்.ஆர்.ரத்னாயக்க (2022.09.30 தொடக்கம் விலகியுள்ளார்.)
10. திரு.பி.எச்.ஏ.நெல்சன்
11. திரு.எச்.ஏ.பீ.குணவர்தன
12. திரு.எம்.ஜி.ஜி.சமன்
13. திரு.ஆர்.சுனில்
14. திருமதி.என்.வி.கே.ஹேரத்

    (2022.10.25 தொடக்கம் சேவையிலிருந்து விலகியுள்ளார்.
15. திரு.எம்.கே.பி.ஜயதிலக்க
16. திரு.வீ.ஜி.நிமல்சிரி
17. திரு.எஸ்.மெத்தேகொட
18. திரு.எம்.பி.நலீம்
19. திருமதி.ஆர்.பத்திரகே
20. திரு.ஏ.ஏ.ஜாபிர்
21. திரு.ஜி.எல்.ஏ.பீரிஸ் (2022.09.30 தொடக்கம் ஓய்வுபெற்றுள்ளார்.)
22. திரு.கே.டி.என்.டி சில்வா
23. திருமதி.பீ.ஜே.ஜயவர்தன
24. திருமதி.டப்.எம்.ஏ.எஸ்.எல்.விஜேநாயக்க

உதவிப் பணிப்பாளர்கள்

1. திரு.ராதாகிருஷ்னன் மதுரதன்
2. திரு.கே.நிரஞ்ஜன்
3. திரு.ஏ.ஏ.டப்.ஜி.ஆர்.ஆர்.பண்டார
4. திரு.பீ.ஜி.பிரசன்ன
5. திருமதி.எச்.எதிரிசிங்க
6. திரு.ஏ.எ.டி.ரி.சாந்த
7. திரு.ரி.வி.டப்.தேவப்பிரிய
8. திரு.யு.ஜி.ஜே.பிரியதர்சன
9. திருமதி.ஆர்.டி.பிரதீப்பிகா
10. திரு.ஈ.ஜே.விஜேதுங்க
11. திரு.எச்.எல்.சிசிர
12. திரு.டபிள்யு.கே.சுமித் வசந்த
13. திரு.ஆர்.அகிலன
14. திரு.எச்.ரி.டி.ஆர்.எஸ்.விஜேசிங்க
15. திரு.திலின ரணசிங்
16. திருமதி.ஜி.டி.சியாமலி
17. திரு.சி.டி.சமரநாயக்க
18. திருமதி.சி.யூ.எம்.கொடிதுவக்கு
19. திரு.சுனில் அபேசிங்க
20. திரு.ஜி.கே.டி.சி.குமார
21. திரு.எஸ்.எம்.ஜே.சுவேந்திரா
22. திருமதி.எஸ்.எம்.கே.சியமுதலி
23. திருமதி.என்.கே.அம்பகஹவத்த
24. திருமதி.டி.சி.ஓ.வித்தான
25. திரு.ஏ.டி.எஸ்.சமரசிங்க
26. திரு.ஏ.பீ.ஜகத் நிசாந்த
27. திரு.எல்.பீ.கே.டப்.வெலிவத்த
28. திரு.டி.எம்.யகம்பத்
29. திரு.கே.பீ.டி.பீ.சிரிசேன
30. திரு.என்.ஏ.ஏ.டி.நாகஹவத்த
31. திரு.எம்.எம்.என்.பி.மதுரசிங்க
32. திருமதி.என்.டி.ரி.எதிரிசிங்ஹ
33. திருதமி.என்.ரி.தலுவத்த
34. திரு.கே.எஸ்.பி.எஸ்.குணசேகர
35. திருமதி.எம்.டி.ஏ.எம்.அமரசிங்க
36. திரு.ரி.எம்.எ.தென்னகோன்
37. திருமதி.விக்கிரமநாயக்க
38. திரு.கே.டி.பீ.குமார
39. திரு.எச்.எ.டி.ஆர்.ஜயரத்ன
40. திரு.எச்.டப்.ஆர்.எஸ்.ஜயவர்தன
41. திருமதி.எ.கே.ஜயவர்தன
42. திரு.என்.ஜி.டி.ஐ.குணரத்ன
43. திருமதி.டி.ஏ.எஸ்.ஆலோகா டி சில்வா (ச.அ.)
44. திரு.கே.டபிள்யு.ரஞ்ஜித் லால்
45. திரு.எஸ்.எம்.எஸ்.பி.சமரகோன்
46. திரு.எஸ்.ஏ.ஏ.எஸ்.அத்துகோரல
47. திரு.கே.பீ.பாதிய அமரநாத
48. திரு.ஐ.எம்.என்.திசாநாயக்க
49. திருமதி.பி.ஜி.டி.கே.காரியவசம்
50. திரு.கே.கே.சோகிஸ்மன்
51. திரு.ஜி.என்.ரணவீர
52. திருமதி.கே.அபிசாதனா

சட்ட அலுவலர்

53.திருமதி.டி.எ.எஸ். ஆலோக்க டி சில்வா

பதவியணி கட்டமைப்பு

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாடுகளின்படி, 2022.12.31 ஆம் திகதிக்கு அந்தந்த பதவிகள் மட்டத்தில் 1843 பேர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர் என்பதுடன் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 2656 காணப்படுகின்றது.

	பதவி	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	வருட இறுதியில் ஆளணி எண்ணிக்கை	வருட இறுதியில் வெற்றிடங்கள்/ மேலதிகம்	சேவைப் பிரிவு
01	பணிப்பாளர் நாயகம்	1	1	0	HM 2-1
02	பணிப்பாளர்	6	2	4	HM1-1
03	பிரதம உள்ளக கணக்காய்வாளர்	1	0	1	
04	முகாமையாளர்	1	0	1	MM 1-3
05	பிரதி/உதவி பணிப்பாளர்	85	71	14	MM 1-1
06	உதவி பணிப்பாளர்- கொள்வனவு	1	1	0	
07	உதவி பணிப்பாளர்-கற்கைகள்	3	0	3	
08	உதவி பணிப்பாளர்-தொழிநுட்பம்	1	0	1	
09	உதவி பதிவாளர்	1	0	1	
10	சட்ட உத்தியோகத்தர்	1	1	0	
11	உள்ளகக் கணக்காய்வாளர்	1	0	1	
12	பொறியியலாளர்	1	0	1	
13	நிர்வாக உத்தியோகத்தர்	3	2	1	JM 1-1
14	பரீட்சை மற்றும் மதிப்பிடல் உத்தியோகத்தர்	13	7	6	
15	விசாரணை உத்தியோகத்தர்	1	1	0	
16	போக்குவரத்து உத்தியோகத்தர்	1	0	1	
17	வழங்கல் உத்தியோகத்தர்	1	1	0	
18	அச்சக உத்தியோகத்தர்	1	0	1	
19	உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்	3	3	0	
20	முறைமை பகுப்பாய்வாளர்	1	0	1	
21	நலன்புரி உத்தியோகத்தர்	1	1	0	
22	கணக்கு உத்தியோகத்தர்	33	29	5	
23	சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்	10	9	1	

24	பயிற்சி உத்தியோகத்தர்	98	50	48	
25	ஆராய்ச்சி உத்தியோகத்தர்	2	1	1	
26	திட்டமிடல் உத்தியோகத்தர்	2	1	1	
27	தவிசாளரின் பிரத்தியேக உதவியாளர்	1	0	1	
28	பிரத்தியேக உதவியாளர் *	7	5	0	
29	மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்)	1	0		MA 5-2
30	மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்)	3	0	3	
31	சிரேஷ்ட ஆலோசகர்	201	116	85	MA 4
32	நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்	70	59	11	
33	கணக்காய்வு உதவியாளர் *	3	0	0	
34	உதவி நூலகர்	1	0	1	MA 3
35	செயற்றிட்ட உதவியாளர்*	34	7	0	
36	தொழில்நுட்ப உதவியாளர்	3	1	2	
37	ஆலோசகர்கள்	1529	1072	457	
38	விளையாட்டு ஆலோசகர்	31	0	31	MA 2-2
39	திட்டமிடல் கலைஞர்	1	0	1	
40	கணிய அளவையாளர்	2	0	2	
41	தொழிநுட்ப உத்தியோகத்தர் (சிவில்)	5	0	5	
42	முகாமைத்துவ உதவியாளர்	196	186	10	
43	உதவி ஆலோசகர் (LRUC*)	38	30	0	
44	எழுத்து கோப்பவர் (அச்சகம்)	3	1	2	MA 1-2
45	விடுமுறை விடுதி பொறுப்பாளர்	2	0	2	
46	மேற்பார்வையாளர் (அச்சகம்)	1	0	1	
47	மேற்பார்வையாளர் (கட்டிடம்)	1	0	1	
48	சாரதி	67	56	11	PL 3
49	களஞ்சிய பொறுப்பாளர்*	2	2	0	
50	அச்சக உதவியாளர்	3	2	1	PL 2
51	புத்தகம் கட்டுநர் (அச்சகம்)	2	1	1	

52	இயந்திர செயற்பாட்டாளர் (அச்சகம்)	2	2	0	
53	அலுவலக உதவியாளர்	8	5	3	PL - 1
54	காவலாளி*	65	35	0	
55	சிறு தொழிலாளர்	101	83	18	
	மொத்தம்	**2656**	**1843**	**743**	

* தற்சமயம் இருக்கும் நபர்களுக்கு மட்டும் பிரத்தியேகமான முறையில் இந்தப் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவர்ககள் ஓய்வுபெற்ற பின்னர் இரத்து செய்யப்படும்.

அமுலாக்கள் பதவியணி - 2022

	பதவி	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	வருட இறுதியில் ஆளணி எண்ணிக்கை	வருட இறுதியில் வெற்றிடங்கள்/ மேலதிகம்
1	HM 2 - சிரேஷ்ட முகாமையாளர் HM 1-1 சிரேஷ்ட முகாமையாளா	08	03	05
2	MM 1-3 முகாமைத்துவ	01	0	01
3	MM 1-1 முகாமைத்துவ	94	73	21
4	JM 1-1 கனிஷ்ட முகாமைத்துவ	178	109 (*05)	67
5	MA 5-2 அமுல்படுத்தும்/ செயற்படுத்தும்/ விரிவாக்கல் உத்தியோகத்தர்கள்	04	0	04
6	MA 4 செயற்படுத்தும்/ ஆலோசனைச் சேவை	274	175 (*0)	96
7	MA 3 இணைந்த சேவை உத்தியோகத்தர்கள்	35	07(*07)	01
8	MA 2-2 முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பம்	1571	1073	498
9	MA 1-2 முகாமைத்துவ உதவியாளர்*- தொழிநுட்பம் அல்லாத	241	217 (*30)	16
10	PL 3 ஆரம்ப மட்ட பயிற்றப்பட்ட	67	56	11
11	PL 2 ஆரம்ப மட்ட பகுதியளவில்	09	07 (*02)	02
12	PL 1 ஆரம்ப மட்ட பயிற்றப்பட்டாத	174	123(*35)	21
	மொத்தம்	2656	1843	743

* தற்சமயம் இருக்கும் நபர்களுக்கு மட்டும் பிரத்தியேகமான முறையில் இந்தப் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவர்ககள் ஓய்வுபெற்ற பின்னர் இரத்து செய்யப்படும்.


ஆளணியின் அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களை வளர்த்தல்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் பதவியணியின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு விருத்தி வருடந்தோறும் நடைபெறுவதுடன் அதற்கு 2022 ஆம் ஆண்டில் கல்விசார் பதவியணிக்கும் கல்விசாரா பதவியணிக்கும் ரூபா மில்லியன் 12 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் கீழ்க் காணும் வகையில் நிகழ்ச்சிகள் அமுல்படுத்தப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் கீழ்க் காணும் வகைப்படுத்தலின் கீழ் பதவியணி பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றச் செய்ய முடிந்துள்ளது.

		பங்குபற்றிய எண்ணிக்கை
கல்விசார்	38	*779
கல்விசாரா	3	216

*** பயிற்சி நிகழ்ச்சிகளின் தன்மையின் படி ஒரு ஆலோசகர் பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளார்.**



தொழிற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்துவது மூலமாக இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி பெற்றுக்கொடுத்தல்

2022 ஆம் ஆண்டு முழுநேரப் பாடநெறிகள் 1383 வுக்கும் பகுதிநேர பாடநெறிகள் 368 வுக்கும் உள்ளடக்கப்படும் பயிற்சி நிகழ்ச்சிகள் நாடுபூராகவும் அமுல்படுத்தப்பட்டு நிறுவன ரீதியான பயிற்சிகளை பெற்ற பயிலுநர்களின் எண்ணிக்கை 34,999 என்பதுடன் 2022.12.31 ஆம் திகதியாகும் போது, நிறுவனரீதியான பயிற்சிகளை முடித்த எண்ணிக்கை 22003 ஆகும். பயிலுநர்கள் 9688 பேர் 2023 ஆம் ஆண்டில் பாடநெறிகளை நிறைவுசெய்வதற்கு உள்ளனர்.


தொழிற் பயிற்சிக்கு சேர்ந்தவர்கள்/பயிற்சியை பூர்த்தி செய்தவர்கள்

வருடம்	2020	2021	2022
பயிற்சிக்காக இணைந்த எண்ணிக்கை	23417	33431	34999
பயிற்சியை பூர்த்திசெய்த எண்ணிக்கை	19346	28074	22003

2023 ஆம் ஆண்டில் பாடநெறிகளை பூர்த்தி செய்வதற்கு உள்ள எண்ணிக்கை


முழுநேரப் பாடநெறிகள் - 5076
பகுதிநேர பாடநெறிகள் - 4612
} 9688

தொழிற் பயிற்சிக்காக இணைந்து கொள்ளல் பயிற்சிகளை பூர்த்திசெய்தல்.



பாடநெறிகளின் துறைகளுக்கமைய பயிலுநர்களை இணைத்துக் கொள்ளல்- 2022


	துறை	இணைந்த பயிலுனர்களின் எண்ணிக்கை (நிறுவனப் பயிற்சிகள்)	சதவீதம்
1	விவசாய பெருந்தோட்ட கால்நடை வளங்கள்	190	0.54%
2	மோட்டர் வாகனங்கள் திருத்தல் மற்றும் பராமரித்தல்	3777	10.79%
3	கட்டிடங்களும் நிர்மாணங்களும்	2965	8.47%
4	மின்சாரம், இலெக்ரோனிக் மற்றும் தொலைத்தொடர்பு	3749	10.71%
5	உணவு தொழிநுட்பம்	1680	4.80%
6	மாணிக்கக் கற்கள் மற்றும் தங்காபரணம்	88	0.25%
7	உணவகம் மற்றும் சுற்றுலா	2823	8.07%
8	தகவல் தொழிநுட்ப தொடர்பாடல் பல்வகை ஊடகத் தொழிநுட்பம்	7427	21.22%
9	தோல் உற்பத்திகள்	53	0.15%
10	உலோக மற்றும் சிறு பொறியியல்	1608	4.59%
11	அலுவலக முகாமைத்துவம்	181	0.52%
12	மரத்துடன் தொடர்புடைய	747	2.13%
13	தனிநபர் மற்றும் சமூகம்	5083	14.52%
14	அச்சக மற்றும் பொதியிடல்	80	0.23%
15	குளிரூட்டி மற்றும் வளிசீராக்கி	653	1.87%
16	புடைவை மற்றும் நெசவு	3270	9.34%
17	சுகாதாரம் மற்றும் சமூக செயற்பாடுகள்	340	0.97%
18	ஏனைய	285	0.81%
	மொத்தம்	**34999**	**100.00%**



குறிப்பின்படி பார்க்கும் போது, அதிக பயிலுநர் கேள்வியொன்று உள்ள துறையாகுவது தகவல் தொழிநுட்ப தொடர்பாடல் மற்றும் பல் ஊடக தொழிநுட்பமாகும்.


தொழிற் சந்தையில் கேள்வியுள்ள தொழில் வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படும் பாடநெறிகளுக்காக இணைந்து கொள்ளும் பயிலுநர்களின் எண்ணிக்கை ஒட்டுமொத்த இணைந்து கொள்ளலின் 46.63% விதமாகும்.

துறை	ஆண்	பெண்	மொத்தம்	சதவீதம்
மோட்டார் வாகன பழுபார்த்தலும் பராமரிப்பும்	3680	97	3777	10.79%
கட்டிடங்களும் நிர்மாணிப்புக்களும்	2357	608	2965	8.47%
மின், இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு	3669	80	3749	10.71%
ஹோட்டல் மற்றும் சுற்றுலா	2326	497	2823	8.07%
மரம் சார்ந்த	691	56	747	2.13%
குளிரூட்டி மற்றும் வளிசீராக்கி	651	2	653	1.87%
உலோக மற்றும் இலகு பொறியியல்	1602	6	1608	4.59%
மொத்தம்	**14976**	**1346**	**16322**	**46.63%**



சமூக கேள்வி அதிகமாகவுள்ள மற்றும் சுயதொழில் வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ள பாடநெறித்

துறை	ஆண்	பெண்	மொத்தம்	சதவீதம்
தகவல் தொழிநுட்ப தொடர்பாடல் பல் ஊடகத் தொழிநுட்பம்	2716	4711	7427	21.22%
தனிநபர் மற்றும் சமூகம்	1348	3735	5083	14.52%
புடைவை மற்றும் நெசவு	519	2751	3270	9.34%
உணவு தொழிநுட்பம்	890	790	1680	4.80%
மொத்தம்	5473	11987	17460	49.88%



நேரடியாக தொழிலில் அமர்த்தப்படாத தொழில் வாய்ப்புக்களுக்கு உதவியாக அமையும் பாடநெறிகள் -2022


பாடநெறி (Course)	இணைந்த எண்ணிக்கை (Enrolment)
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பவலர்	2144
கணினி வன்பொருள் கலைஞர் - A Plus	775
கணினி உள்ளீடு உதவியாளர்	1597
கணினி வன்பொருள் கலைஞர்	39
மொத்தம்	**4555**

தொழிற் பயிற்சி நிலையங்களின் விரிவாக்கம

2022 ஆம் ஆண்டில் நாடுபூராவும் செயற்பட்ட பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை கீழ்க் கண்டவாறாகும். இதற்கு மேலதிகமாக சிறைச்சாலைகள் 02 இலும், புனர்வாழ்வு நிலையங்கள் 01 இலும் தொழில் பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டது.

பயிற்சி நிலையம்	2020	2021	2022
தேசிய தொழிற் பயிற்சி நிறுவனம்	08	08	08
மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம்	22	22	22
தொழிற் பயிற்சி நிலையம்	181	179	179
மூன்றாம்நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட ஏனைய நிலையங்கள் (சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு)	05	04	03
மொத்தம்	**216**	**213**	**212**

2022 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தொழிற் பயிற்சி நிலையங்கள் 213 செயற்பட்டதுடன் கொழும்பு மாவட்டத்தில் தெஹிவளை தொழில் பயிற்சி நிலையம் பெல்லன்வில தொழில் பயிற்சி நிலையத்துடன் இணைக்கப்பட்டதுடன் வட்டரெக்க சிறைச்சாலையில் செயற்படுத்தப்பட்ட தொழில் பயிற்சி நிலையம் மூடப்பட்ட காரணத்தால் ஒட்டுமொத்த நிலையங்களின் எண்ணிக்கை 212 வானது.




தொழிற் பயிற்சி நிலையங்களின் விரிவாக்கம்-2022

மாகாணம்	மாவட்டம்	நிறுவனம் எண்ணிக்கை						மொத்தம்
		NVTI	DVTC	VTC		AT	PC	Reh
மேல்	கம்பஹ	-	1	13	3	-	-	14
	கொழும்பு	3	1	10	1	-	-	14
	களுத்துறை	-	1	7	1	-	-	08
வட மேல்	புத்தளம்	-	1	6	-	-	-	07
	குருநாகல்	-	1	7	-	-	-	08
வடக்கு	யாழ்ப்பாணம்	-	1	5	0	-	-	06
	கிளிநொச்சி	-	1	4	-	-	-	05
	முல்லைத்தீவு	-	1	2	-	-	-	03
	மன்னார்	-	-	1	-	-	-	01
	வவுனியா	-	1	3	3	-	-	04
கிழக்கு	திருகோணமலை	-	1	7	-	-	-	08
	மட்டக்களப்பு	1	-	10	-	-	-	11
	அம்பாறை	-	1	12	1	-	-	13
தெற்கு	காலி	2	1	12	3	2	-	15
	மாத்தறை	1	-	12	-	-	-	13
	அம்பாந்தோட்டை	1	1	09	-	-	-	11
சபரகமுவ	கேகாலை	-	1	7	1	1	-	08
	இரத்தினபுரி	-	1	11	-	-	-	12
ஊவா	பதுளை	-	1	7	-	1	-	08
	மொனராகலை	-	1	7	-	1[1]	-	09
மத்திய	கண்டி	-	1	8	-	2	-	09
	மாத்தளை	-	1	5	-	-	-	06
	நுவரெலியா	-	1	4	-	-	-	05
வடமத்திய	அனுராதபுரம்	-	1	7	1	-	-	8
	பொலொன்னறுவை	-	1	3	1	[1]	[1]	6
	மொத்தம்	**8**	**22**	**179**	**15**	**02**	**1**	**212**

NVTI - தேசிய தொழிற் பயிற்சி நிறுவனம்
DVTC - மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம்
VTC - தொழிற் பயிற்சி நிலையம்
AT - ஒன்றிணைந்த
PC - சிறைச்சாலை
Reh - புனர்வாழ்வு நிலையம்
[ ] - பயிற்சி நிலையங்களாக TVEC பதிவுசெய்துள்ள நிலையங்கள்


VTA Traning Center Network - 2022



தொழில் பயிற்சி பரீட்சைகளும் மதிப்பிடல்களும்

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினால் பயிற்சிபெற்ற பயிலுநர்களை மதிப்பிடும் முறையியலொன்றின் ஊடாக மதிப்பிடப்பட்டு சான்றிதழாளர்களாக மாற்றப்படுகிறது. இதற்காக வருடாந்தம் ரூபா மில்லியன் 40 இற்கு கூடுதலான தொகை செலவு செய்யப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டு மதிப்பிடல்கள் நடாத்தப்பட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.


இல	வகை	வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை
01	தேசிய தொழில் தகைமை (NVQ)	17734
02	தேசிய தொழில் தகைமை அல்லாத (Non NVQ)	2356
03	முந்திய அறிவை மதிப்பீடும் முறை (RPL)	3006
	மொத்தம	**23096**



தொழில் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும்

இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் விருப்பம் மற்றும் தகைமைகளுக்கமைய பொருத்தமான தொழில் துறையை தேர்ந்தெடுப்பதற்கு வழிகாட்டுவது இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் மற்றுமொரு பணியாகும். அதற்காக தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் குழுவொன்றினால் இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் விருப்பம் மற்றும் தகைமைகளுக்கமைய பொருத்தமான தொழில் துறையை தேர்ந்தெடுப்பதற்காக நாடலாவிய ரீதியில் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் கீழ்க் கண்டவாறாகும்.

இலக்குக் குழு	நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	கலந்துகொண்ட எண்ணிக்கை
பாடசாலை மாணவர்கள்	459	24,594
பாடசாலையை விட்டு விலகிய	370	21,245
பயிற்சிபெறுவோர்	399	17,167
பெற்றோர்கள்	288	12,125
வேறு	263	13,009
மொத்தம்	**1,779**	**88,140**



தொழிலில் அமர்த்தல்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் பயிலுனர்களை மேலதிக பயிற்சிக்கு அனுப்பும், தொழில் வாய்ப்புக்கு அனுப்பும் மற்றும் இருக்கும் பாடநெறிகளை இற்றைப்படுத்தும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட கைத்தொழில் தொடர்புகள் பிரிவு தற்போது பல்வேறு தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளது.

கைத்தொழில் தொடர்புகள் பிரிவின் மூலம் நிறுவனப் பயிறிகளை நிறைவு செய்த பயிற்சியாளர்களுக்கு மேலதிக பயிற்சிக்காக அனுபப்படுவதுடன் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையில் பதிவுசெய்யப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் ஊடாக வேலைகளில் அமர்த்தப்படுகின்றனர். அவ்வாறு தொழிலில் அமர்த்தப்படுவது, பாடநெறிகளை வெற்றிகரமாக முடித்த இளைஞர் யுவதிகள் என்பதுடன் பின்வரும் வகைப்படுத்தலின் கீழ் வரும் அனைவரும் வேலையில் அமர்த்தப்படமாட்டார்கள்.

- தொழிற் பயிற்சி பாடநெறிகளை பயிலுகின்ற முப்படை வீரர்கள்
- சிறைக் கைதிகள்
- கிழக்கு மாகாணம் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் பின்வரும் பாடநெறிகளை பயிலும் பயிலுனர்களில் குறிப்பிட்ட சதவீதத்தினர் அநேகமாக தமது தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பயிற்சிகளை பெறுகின்றனர்.


  a) அழகுக்கலை
  b) சிகை அலங்காரம்
  c) சாதாரண தையல்

- தேசிய தொழிற் தகைமை மட்டம் 3 மற்றும் 4 ஐ முடித்து, மேலும் NVQ மட்டங்களை கற்க விரும்பும் பயிற்சியாளர்கள் மற்றும் உயர்கல்வி பெற விரும்புபவர்க
- பகுதிநேர பாடநெறறிகளை கற்பது (தொழில்புரிகின்ற அறிவு மற்றும் திறன்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு குழுவினர் என்பதால்.)
- மேலும், கிராமப்புற பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற பெரும்பாலானோர் (இந்த நபர்கள் வேலைகள் குவிந்து கிடக்கும் நகர்ப்புறங்களில் பணிபுரிய தயக்கம் காட்டுவது மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அவர்கள் வசிப்பிடத்திலிருந்து வேலை செய்ய போதுமானதாக இல்லாத காரணத்தல்)
- எங்கள் நிறுவனத்தில் பதிவு செய்யப்படாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லுவோர்.

எவ்வாறாயினும் காணப்படும் பொருளாதார வீழ்ச்சியின் கீழ் இருக்கும் வேலை வாய்ப்புகள் இல்லாதுப்போதல் காரணத்தாலும் தரவுகளை உறுதிப்படுத்திக கொண்ட பயிற்சியாளர்கள் 5686 தொழிலில் அமர்த்தப்படுதல் 2022.12.31ஆம் திகதிய நிலவரப்படி பதியப்பட்டுள்ளதுடன் ஏனைய தொழில் அமர்த்தப்படுதல் உறுதிப்படுத்தப்பட்ட வண்ணமுள்ளது.

கைத்தொழில் தொடர்புகள் பிரிவு மூலம் மாவட்ட மட்டத்தில் கைத்தொழில் அமர்வுகளை நடாத்தும் மற்றும் தொழிற் சந்தைகளை நடாத்தும் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக தொழில் அமர்த்தல் மேலும் அதிகரிக்கச் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

இல	பயிற்சித் துறை	தொழிலில் அமர்த்திய எண்ணிக்கை			
		உள்நாட்டு	வெளிநாட்டு	சுயதொழில்	மொத்தம்
01.	கட்டிடங்களும் நிர்மாணங்களும்	421	12	119	552
02.	மோட்டர் வாகனங்கள் திருத்தல் மற்றும் பராமரித்தல்	429	12	40	481
03.	மின்சாரம், இலெக்ரோனிக் மற்றும் தொலைத்தொடர்பு.	483	18	120	621
04.	குளிரூட்டி மற்றும் வளிசீராக்கி	173	7	18	198
05.	உணவு தொழிநுட்பம்	333	25	43	401
06.	தொடர்பாடல் பல்வகை ஊடாக தொழிநுட்பம்	648	3	84	735
07.	உணவகம் மற்றும் சுற்றுலா	440	35	24	499
08.	உலோக மற்றும் சிறு பொறியியல்	280	12	9	301
09.	மரத்துடன் தொடர்புடைய	192	2	47	241
10.	மாணிக்கக் கற்கள் மற்றும் தங்காபரணம்	17	5	5	27
11.	அச்சக மற்றும் பொதியிடல்	46	-	-	-
12.	புடவை மற்றும் நெசவு	554	3	266	823
13.	தனிநபர் மற்றும் சமூகம்	446	5	238	689
14.	விவசாய பெருந்தோட்ட மற்றும் கால்நடை வளங்கள்.	6	-	2	-
15.	தோல் சார்ந்த உற்பத்திகள்	19	-	8	-
16.	அலுவலக முகாமைத்துவம்	32	-	4	36
	மொத்தம்	**4519**	**139**	**1027**	**5685**




தொழில் தாபிக்கப்படுதல் மற்றும் தேசிய பொருளாதார பங்களிப்பு

வகை	தாபிக்கப்பட்ட எண்ணிக்கை	தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கிய பங்களிப்பு (ரூபா மில்லியன்) (அனுமானம்)
உள்நாட்டு தொழில்	4,519	2,487
வெளிநாட்டு தொழில்	139	214
சுயதொழில்	1,027	762
மொத்தம்	5,685	3,463

(மூன்றாம்நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் தொழிற்சந்தை சஞ்சிகை மற்றும் தொழிலில் அமர்த்தப்பட்ட நிறுவனங்களின் தரவுகளின் அடிப்படையில் 2022 ஆண்டில் தொழிலில் அமர்த்தப்பட்ட பயிற்சியாளர்கள் எண்ணிக்கை ஒரு வருடகாலம் சேவை செய்வார்கள் என்று கற்பனைசெய்து அதன்படி பெற்றுக்கொள்ளும் வருமாணத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்து தயாரிக்கப்பட்டுள்ளது)

வருடம்	உள்நாட்டு	வெளிநாட்டு	சுயதொழில்	மொத்தம்
2018	6542	107	1374	8023
2019	3912	47	687	4646
2020	2316	13	426	2755
2021	935	28	175	1138
2022	**4519**	**139**	**1027**	**5685**




(இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை மூலம் தொழில் அமர்த்தப்பட்டுள்ள விபரம் மட்டும்)

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை எப்பொழுதும் தனியார் துறைகளுடன் இணைந்து பல்வேறு தொழில்வலர் திறன் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் இளம் சமூகத்தை ஊக்குவிக்கும் பணியில் ஈடுபடுகிறது.

நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்சித்திட்ட எண்ணிக்கை	பங்குபற்றிய எண்ணிக்கை	அனுசரணை நிறுவனம்
டைல் பொருத்துதல்	08	341	லங்கா டைல் நிறுவனம்
“அழகுக்கலை” தலைமுடி வெட்டுதல்.	1	65	நேசர்ஸ் பியூட்டி கிரி யேசன்.்.ரியாரா மாகடிங் நிறுவனம்
அலுமீனியம் தயாரித்தல்	10	398	சுவிஸ்டெக் அலுமீனியம்
மின் தொழிநுட்பவலர்	7	350	ACL கேபல்ஸ்
மோட்டர் சைக்கில் மற்றும் முச்சக்கர வண்டி	3	115	ஹேமந்த (PVT) LTD
பேக்கரி உற்பத்தி	3	150	VTA/Keels Food
மொத்தம்	32	1419	



தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

இளம் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்குவித்து அவர்களின் தொழில்முயற்சி திறமைகளை மேம்படுத்துதல் மற்றும் அவர்களுக்கு உதவுதலும் இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் பிரதான நோக்கமுமாகும்.

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையில் பாடநெறிகளை பயிலுகின்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சிகள் 19 நடாத்தப்பட்டு, 347 பேருக்கு தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சிகளை பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளதுடன் தொடர்புடைய பல்வேறு அரச மற்றும் தனியார் வங்கிகள் ஊடாக SEPI கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்குதல் இவ்வாண்டில் நிறைவேற்ற முடியாதுப்போனது.

சவால்கள்

- தற்கால இளம் தலைமுறையை கவரும் வகையில் தோற்றத்துடன் கூடிய தொழிற் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை குறைவடைதல்.
- நவீன தொழிநுட்ப முறையியல்களை தற்சமயம் நடைமுறையிலுள்ள பாடநெறிகளுக்காக உள்ளீர்ப்பதற்கு வளங்கள் போதாமை.
- தரமிக்க பயிற்சி ஒன்றை வழங்குவதற்கு தேவையான ஆலோசகர் பதவியணியின் சம்பளம் மற்றும் ஏனைய வசதிகள் போதுமானளவு அவர்களுக்கு கிடைக்காமை காரணமாக சேவையில் இருந்து விலகிச்செல்லும் சாத்தியம் காணப்படுகிறது.
- பயிற்சி நடவடிக்கைகளின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்காக நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவு, திறமை , அனுபவம் உள்ள ஆலோசகர்களின் பற்றாக்குறை மற்றும் அவர்களுக்கு உயர்ந்த சம்பளம் வழங்க முடியாமை
- தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குள் அதிக சமூக கேள்வி காணப்படும் பாடநெறிகள் தொடர்பான ஆலோசகர்கள் நெளிநாட்டு தொழிற்களுக்கு செல்லுதல் மற்றும் அதற்காக புதிய ஆலோசகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் இல்லாமை.
- கைத்தொழில் துறையில் அதிகூடிய தொழில் கேள்வி உள்ள தொழில்வாண்மை மட்ட பாடநெறிகள் தொடர்பாக இளைஞர் யுவதிகளுக்கு அதிக ஆரம்வம் இல்லாமை
- இளைஞர் யுவதிகளை தொழில் பயிற்சி தொடர்பாக கவருவதற்கு பாரிய சிரமம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருத்தல் மற்றும் பரந்தளவில் பிரச்சாரங்களை புரிவதற்கு போதிய நிதி வசதிகள் கிடைக்காை
- தொழில் பயிற்சி வழங்குகின்ற அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற வசதிகள் அதிகரித்தமை காரணமாக அதற்கேற்ப வசதிகளை வழங்க முடியாமையின் அடிப்படையில் பாரிய போட்டித்தன்மைக்கு முகங்கொடுக்க நேரிட்ட
- தொழில் பயிற்சி வழங்கும் தனியார் துறையின் நிறுவனங்களுடன் போட்டித்தன்மையுடன் செயற்பட நேரிடுதல்.
- தொழில் பயிற்சியின் முக்கியத்துவத்தை பற்றி சமூகத்தை அறிவுறுத்தும் மற்றும் மனப்பாங்கு அபிவிருத்தி பரந்ளவில் பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- தொழில் பயிற்சி நிலையங்களுக்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு போதுமானளவு நிதி வசதிகள் இன்மை. நாடுபூராகவும் நடைமுறைப்படுத்தப்படும் தொழில் பயிற்சி நிலையங்களுக்கும் சமமான மட்டத்தில் வசதிகளை வழங்க முடியாமை.
- சேவை வழங்கும் நிறுவனம் என்ற வகையில் அரசாங்கத்தினால் ஒதுக்கப்படுகின்ற மூலதனம் மற்றும் மீண்டுவரும் நிதியங்கள் போதுமானளவு இல்லை.
- பயிற்சி துறை மற்றும் தொழில் கேள்விக்கு இடையில் உள்ள பொருந்தாமையை குறைத்துக்கொளவதற்கு தேவையான நவீன உபகரனங்களின் பற்றாக்குறை.

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் கணக்காய்வு குழு செயலாற்றுகை 2022

உள்ளக கணக்காய்வாளர் பிரிவு

உள்ளக கணக்காய்வு என்பது நிர்வாகத்திற்கான ஒரு சேவையாக செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்வதற்கான ஒரு சுயாதீனமான மதிப்பீட்டுச் செயல்பாடாகும். இது ஒரு நிறுவனத்தில் உள்ள வளங்களை திறமையான மற்றும் பயனுள்ள பயன்பாட்டிற்கு பங்களிக்கும் செயல்பாடாக உள்ளக கட்டுப்பாடு, நிதி மற்றும் பிற விடயங்களின் செயல்திறனை நிருவகிக்கும் ஒரு முறையாகும்.

உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பிரதானியாக பிரதம உள்ளக கணக்காய்வாளர், கணக்காய்வுக் குழு ஊடாக அதிகார சபைக்கு அறிவிக்கப்படுவதுடன் சகல ப்பதுடன் சகல நிருவாக நடவடிக்கைகளுக்காக பிரதம உள்ளக கணக்காய்வாளர் அறிவிப்பது அதிகார சபையின் தலைவருக்கு மட்டுமேயாகும். முதன்மையான பணிகளை தயாரித்து தீர்மானிப்பதற்கும்,, கணக்காய்வு திட்டத்தை தயாரிப்பதற்கும், கண்டுபிடிக்கப்படுகின்ற பிரதான புலப்படுத்தல்களையும் தகவல்களையும் சரியாகவும், துல்லியமாகவும், கணக்காய்வுக் குழு ஊடாக பணிப்பாளர் சபைக்கு வழங்குவதற்கும் பிரதம உள்ளக கணக்காய்வாளர் கணக்காய்வுக் குழுவுடன் இணைந்து செயற்படுவார்.

கணக்காய்வுக் குழு அறிக்கை

சேர்வமைப்பு

மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில், குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு இருந்தனர்.

தவிசாளர்

(i) திரு.ரி.எம்.ஜே.பண்டார (2022.01.01 முதல் 2022.05.25 வரை)
குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்

(ii) திரு.யூ.என்.மல்லவாரச்சி (2022.05.26 கூட்டத்திலிருந்து)
குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்

உறுப்பினர்கள்

திரு.சமன் டி வடுகே, குழு உறுப்பினர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு.பியதாச மரம்பகே, குழு உறுப்பினர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்
திரு.சதுர டி சில்வா, குழு உறுப்பினர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்

பெயர்	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை	2022 ஆண்டில் நடாத்தப்பட்ட மொத்த கூட்டங்களின் எண்ணிக்கை
திரு.ரி.எம்.ஜே.பண்டார	01	03
திரு.யூ.என்.மல்லவாரச்சி	02	
திரு.சமன் டி வடுகே	03	
திரு.பியதாச மரம்பகே	02	
திரு.சதுர டி சில்வா	01	

தேசிய கணக்காய்வாளர் அலுவலகத்தின் கணக்காய்வாளர் அத்தியட்சகர் மற்றும் கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்தி, தொழில்சார் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் கண்காணிப்பாளராக கூட்டங்களில் பங்கேற்றதுடன், அனைத்துப் பிரிவுகளின் பிரதானிகளும் அவர்களுக்கு கிடைக்கும் அழைப்பின்படி கூட்டங்களில் பங்கேற்றனர்.

குழுவின் செயலாளர்

பிரதம உள்ளக கணக்காளர் திருமதி.ஜே.எம்.சி.சிரிவர்தன குழுவின் செயலாளராக கடமை புரிகின்றார்.

நோக்கம்

உள்ளக கணக்காய்வின் வழிகாட்டுதல் மூலம் குழுவின் நோக்கம் தொடர்பில் தெளிவான வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வுக் குழு தனது பொறுப்புக்களை, கீழ்க்கண்ட விடயங்களும் உள்ளடங்களாக நிறைவேற்றுவதற்கு பணிப்பாளர் சபைக்கு உதவுகிறது.

- இலங்கை நிதி அறிக்கையிடல் தரநிலைகளுக்கு ஏற்ப நிதி அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் வழங்குதல் மற்றும் நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மை.
- நிதி அறிக்கையிடல் தேவைகள் 1995 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை சட்டம் மற்றும் நிதி அறிக்கை தொடர்பான பிற ஒழுங்குமுறைகள் மற்றும் விதிமுறைகளுடன் இணங்குதல்.
- இலங்கைத் கணக்காய்வு தரநிலைகளை பூர்த்திசெய்யும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் போதுமானதாக இருப்பதை உறுதி செய்வதற்கான செயல்முறைகள்.
- உள்ளக கணக்காய்வு செயல்பாடுகளின் செயலாற்றுகையை உறுதிப்படுத்தல்.
- பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் மேல் முகாமைத்துவ தரத்தில் சேவை புரியும் நபர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட குறித்த தரப்புக்களின் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல்.

உள்ளக கணக்காய்வு

கணக்காய்வுக் குழு மூலம் உள்ளக கணக்காய்வின் விடயவிதானங்கள், செயலாற்றுகை, உள்ளக கணக்காய்வின் செயல்பாடுகளின் விளைத்திறன் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களின் பாரபட்சமற்ற தன்மை ஆகியவை மீளாய்வு செய்யப்பட்டது.

வெளிப்புற கணக்காய்வு

கணக்காய்வுக் குழு மூலம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, அதன் முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் எழுப்பப்பட்ட சிக்கல்களுக்கு பதிலளிக்கும் வகையில் நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை மீளாய்வு செய்யப்பட்டதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் அது தெடர்பிலான தீர்வு நடவடிக்கைகளையும் பரிந்துரைக்கப்பட்டன.

இணக்கம் தெரிவிக்கப்படல்.

உள்ளக கட்டுப்பாட்டு தொகுதிகளில் போதுமான தன்மை மற்றும் விளைத்திறனைப் போன்று சட்டவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குதல் தொடர்பிலும், இணங்காத சந்தர்ப்பங்கள் ஏதேனும் இருந்தால், அது தொடர்பாக எடுக்கப்பட்ட பின்தொடர்தல் நடவடிக்கைகள் ஆகியவற்றைக் குழு மேற்பார்வையிடுகிறது. regard in necessary occasions.

கணக்காய்வுக் குழு கூட்டத்தில் கவனம் செலுத்தும் முக்கிய துறைகள் மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகளின் சுருக்கம்.

மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் பின்வரும் துறைகள் தொடர்பில் உரிய முறையில் கவனஞ் செலுத்தப்பட்டன.

அரச கணக்காய்வு ஐயவினாக்களை மீளாய்வு செய்தல், மாவட்ட கட்டுமானம், கொள்முதல் செயல்முறை, கோப் குழுவின் உத்தரவுகளை செயல்படுத்துவதில் முன்னேற்றம், பாராளுமன்றத்தில் ஆண்டு அறிக்கை சமர்ப்பித்தலின் முன்னேற்றம், மாவட்ட அலுவலகங்களின் செயல்திறன் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பது, போக்குவரத்துத் துறையின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துதல், நிறுவன அலுவலர்களுக்கு விழிப்புணர்வு செயலமர்வுகளை நடாத்த பரிந்துரை வழங்குதல், அரச கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளித்தல், முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல், உள்ளக கணக்காய்வுப் பிரிவு மூலம் கண்டறியப்பட்ட பொதுவான பிழைகள் மற்றும் குறைபாடுகளை மீளாய்வு செய்தல், அந்நிய செலாவணியைப் பெறக் கூடிய வகையில வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறைகளில் கேள்வி நிலவும் துறைகளில் பயிற்றப்பட்ட பணியாளர்களை அனுப்பும் பொருட்டு அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான திட்டத்தை தயாரிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குதல். செலவினங்களை மீளாய்வு செய்யும் குழுவொன்றை நியமித்தல், பயிற்சித் திட்டத்தை செயல்படுத்துவதில் முன்னேற்றத்தை கவனத்தில் கொள்ளல், நிருவாக உத்தரவுகளுக்கான ஆலோசனைகளை வழங்குதல், கடனாளி நிலுவைகளை வெட்டுதல், 2023 உள்ளக கணக்காய்வு திட்டத்தை மீளாய்வு செய்தல், பதவியணிகளின் தனிப்பட்ட கோவைகளை பூரத்தி செய்வதற்கு ஆலோசனைகளை வழங்குதல் போன்றவை உள்ளடங்கும்.

நிபுநாத சிசுசவிய இற்கான நிதியம்		138,872,000.00
அமைச்சகத்திற்கான நிதியம்		1,998.00
பதவியணி ஆகுசெலவு		
ஈ.பி.எவ். செலவு	122,637,015.34	
ஈ.ரி.எவ். செலவு	30,660,546.49	
ஏனைய கொடுப்பனவு (பதவியணி)	290,911,989.33	
சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு	883,266,085.35	
பதவியணி சேவைப் பணிக்கொடை	51,734,600.00	
பிரயாணக் கொடுப்பனவு		
விடுதி செலவுகள்	134,742.00	

விபரம்	பற்று	வரவு
பிரயாணம்- உள்நாட்டு	4,779,458.10	
பரிசோதனைச் செலவு	4,171,309.00	
வழங்கள் மற்றும் ஏனைய நுகவோர் பொருட்கள்		
எரிபொருள் மற்றும் கிரீஸ்	28,203,625.80	
ஏனைய	1,877,827.11	
காகிதாதிகளும் அலுவலக தேவைகளும்	12,114,179.94	
அச்சிடப்பட்ட பொருட்கள்	5,454,801.35	
பராமரிப்பு		
கட்டடப் பராமரிப்பு	17,824,346.34	
இயந்திர உபகரனங்கள் -பராமரிப்பு	11,965,387.21	
வாகனப் பராமரிப்பு	11,563,774.41	
அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு	5,031,911.21	
ஒப்பந்த சேவைகள்		
விளம்பரம்	2,014,337.79	
கணக்காய்வுக் கட்டணம்	1,200,000.00	
மின்சாரம்	60,224,944.34	
வாடகைக் கட்டணம்	2,704,064.00	
காப்புறுதி	5,459,885.80	
சுத்திகரிப்பு சேவைகள்	21,658,894.71	
பத்திரிக்கை மற்றும் வாரசஞ்சிகை	430,307.83	
தபால் கட்டணம்	1,283,347.86	
வாடகை, வரிப்பணம்	8,633,991.99	
பாதுகாப்பு கட்டணம்	57,542,283.40	
ஊழியர்களின் நலன்புரிகளும் ஏனைவைகளும்	911,022.00	
தொலைபேசிக் கட்டணம்	28,100,251.43	
போக்குவரத்து	1,741,355.00	
தண்ணீர்	14,552,747.79	
ஆலோசனை மற்றும் தொழிற்சார் கட்டணம்	405,000.00	
வேலையில் அமர்த்தல் ஆராய்ச்சி மற்றும் தொழில்முயற்சி		
பாடநெறிகள் அபிவிருத்தி	405,530.00	
வேலையில் ஈடுபடுவர்களுக்கான பயிற்சி, மேற்பார்வை	5,345,565.06	
தொழில் முயற்சியாளர் நிகழ்சித்திட்டம்	624,246.25	
வேலையில் அமர்த்தல்	3,098,495.00	
ஆராய்ச்சி மற்றும் கற்கை	731,349.50	
பிரத்தியேக மக்கள் தொடர்பு	702,364.25	
ஏனைய செயற்பாட்டு செலவகள்		
அனுமதிக்கப்பட்ட இடைவிலகள்	325,050.00	
பரீட்சைகள் மற்றும் மதிப்பீடு	48,298,372.43	
சிறப்புக் கொடுப்பனவு	633,000.00	

விபரம்	பற்று	வரவு
சட்ட நடவடிக்கை கட்டணம்	592,402.00	
நானாவித	4,251,539.37	
தரக் கட்டுப்பாட்டு நம்பிக்கை	5,549,408.50	
பருவச்சீட்டு	15,571,110.29	
விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	349,485.00	
உபகரனங்களும் நுகர்வும்	3,791,139.20	
பயிற்சி கண்காணிப்பு	316,604.00	
விசேட செயற்றிட்டத்திற்கான செலவு		
நிபுணதா சிசுசவிய நிகழ்ச்சி செலவு	138,872,000.00	
ஆலோசகர் ஊக்குவிப்புக் கொடுப்பணவுச் செலவு	112,827,689.50	
ILO இற்கான செலவு	6,409,201.85	
SFIG க்கான நிதியம்	371,666.00	
திறன் வேலை TVEC க்கான நிதி	607,680.00	
அமைச்சகத்திற்கான நிதியம்	1,998.00	
நிதி ஆகுசெலவு		
வங்கிக் கட்டணங்கள்	166,881.00	
பயிற்சி பொருட்கசள்	131,608,714.56	
பதவியணி பயிற்சி- தொழில் அபிவிருத்தி	8,937,679.90	
மேம்பாட்டு விடயங்களுக்கான செலவு	13,200,211.58	
தொழில் வழிகாட்டல்	1,107,461.00	
தேய்மானம்	588,968,574.91	
நிதி லீசிங் இற்கான வட்டி	2,365,180.00	
குத்தகை முறையின் கீழ்/வாடகைக்கு வழங்குதல்	4,427,506.64	
இலாப நட்டக் கணக்கு		4,488,492,944.19
முந்திய வருட சரிசெய்தல்		29,422,032.16
மொத்தம்	**13,292,965,038.49**	**13,292,965,038.49**

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. VOT/D/VTA/1/2022 ඔබේ අංකය உமது இல Your No. திகதி Date 2023 ஆகஸ்ட திகதி

தலைவர்
இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை

இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை.

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, அதிகார சபையின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்டை

(ஆ) இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 14 ஆவது பிரிவு பிரகாரம், அதிகார சபையால் அவர்களுக்கு உரித்தற்ற 20 காணிகளில் நிருமாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி மற்றும் அதிகார சபைக்கு உரியதாக இருந்த 08 காணிகளும், அந்தக் காணிகளில் நிருமாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்களின் பெறுமதியும் மதிப்பிடப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை .

(ஆ) 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீள்கணிப்பீட்டில் அடையாளம் காணப்பட்ட மீள்கணிப்பீட்டு மிகை கணக்கு வைக்கும்போது, 2018 ஆம் ஆண்டில் மேற்கொண்ட சொத்துக்கள் மீள்கணிப்பீட்டில் அடையாளம் காணப்பட்ட ரூபா.51,409,653 ஆன மீள்கணிப்பீட்டு நட்டம் தொடர்பில் இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 52 ஆவது பந்தி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் திரட்டிய மிகை மற்றும் மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் அந்த பெறுமதியில் ஒழுங்குமுறையில் குறைவாகவும் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2019 ஆம் ஆண்டில் நிதிசார் குத்தகை அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்த 03 மோட்டார் வாகனங்களுக்கு ஏற்புடையதாக நிதிசார் குத்தகை பொறுப்பு மற்றும் வட்டி செலவினங்கள் கணக்கு வைக்கும்போது, இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 12 இல் குறிப்பிட்ட வகையில் தொக்கி நிற்கும் (implicit) வட்டி விகிதம் அடிப்படையாகக் உநடைமுறையல்லாத மற்றும் நடைமுறை குத்தகை பொறுப்புகள் ஒழுங்குமுறையில் ரூபா.1,177,479 ம் மற்றும் ரூபா.1,119,992 ம் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் திரட்டிய மிகை ரூபா.2,297,471 ஆல் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்படைக்கப்பட்டிருந்த செலவினம் ரூபா.7,743,902 ஐ மாத்தறை மாவட்டத்தில் ருகுணுகம தொழில்சார் பயிற்சி நிலையக் கட்டிடத்தில் மூலதனமயப்படுத்தாமை காரணமாக கட்டிடங்களின் பெறுமதி குறித்த பெறுமதியிலும், பிடிபணம் கணக்கின் மீதி ரூபா.398,158 குறைவாகவும், மேற்கொள்கின்ற வேலை கணக்கில் மீதி ரூபா.7,345,744 ம் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்விற்கான ஆண்டில் கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களின் சொத்துக்கள் வகுப்புகளின் பொருட்டு தேய்மானம் கணக்கிடுகையில் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் கைப்பற்றிய சொத்துக்களுக்கு ஏற்புடையதாக மீளாய்விற்கான ஆண்டில் தேய்மானங்களை கணக்கிடும்போது இரட்டிப்பாக கணக்கிடப்பட்டுள்ளமையால், ஆண்டின் தேய்மான செலவினம் ரூபா.134,630,322 ஆல் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்விற்கான ஆண்டின் மிகை மற்றும் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மீதி அப் பெறுமதியில் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

உ) மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் 2022.்.2023 கல்வி ஆண்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட பகுதி அளவிலான 09 கற்கைநெறிகளின் பொருட்டு 2023 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா.3,054,300 ஆன செலவினம் 2022 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்படுதல் காரணமாக மீளாய்விற்கான ஆண்டின் பற்றாக்குறை மற்றும் அட்டூறு செலவினம் அந்த அளவில் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) அதிகார சபையின் பரீட்சை மற்றும் மதிப்பீட்டுப் பிரிவாலும் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி குழுவின் சான்றிதழ் வழங்கும் பிரிவாலும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, NVQ சான்றிதழ் வழங்கும் பொருட்டு அதிகார சபையால் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவிடம் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்தப்பட வேண்டிய ரூபா.8,156,600 ஐ கணக்கு வைக்கப்படவில்லை.

(எ) விசேட கருத்திட்டங்களுக்காக மீளாய்விற்கான ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா.13,266,934 ம் மற்றும் பரிமாற்றப்படாத கொடுக்கல்வாங்கல்களில் உருவாக்கப்பட்ட மூலதன அளிப்பு வருமானத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா.18,632,491 ம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு தேவையான சாட்சிகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஏ) கணக்கீட்டு முறைமை தொடர்பில் மேற்கொண்ட மாதிரி பரிசோதனையில் 2022 ஆம் ஆண்டில் முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்த தரவுகள் 2023 ஆம் ஆண்டு தொடக்கம் ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில், ஜெர்னல் குறிப்புகள் பதியப்படாது ரூபா.1,155,529 ஆன 144 பற்றுச்சீட்டுகள் மற்றும் மொத்தம் ரூபா.1,027,250 ஆன 96 இன்வொயிஸ்கள் அழிக்கப்பட்டு (delete) திருத்தம் செய்துள்ளமை அறிய வந்தது. அதேபோன்று கணக்கு முறைமையில் தரவுகள் உள்ளடக்கும் அலுவலர்களிடம் எந்தவொரு கட்டுப்பாடுகளுமின்றி தரவுகளை வேறுபடுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3 அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்பு கூறல் வேண்டும

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்வின் பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிக்கும்போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக பொருண்மையாக பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்ளுதலாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களை அடிப்படையாகக்கொண்டும, இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதென நான் முடிவு செய்தால், அந்த விடயம் என்னால் அறிக்கையிடல் தேவையானதாகும். இது தொடர்பில் நான் அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபையின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தொடர்பு கொள்கின்றேன்.

2. ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய நிதி அறிக்கைகள் அதிகார சபையால் பேணிச் சென்றிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி அதிகார சபையின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீதும் அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்வதற்கான எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி தேசிய சபை கட்டுப்பாட்டுச் சபையின் உள்ள எவரேனுமொரு உறுப்பினர் சபையுடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டுள்ளது என்பது தொடர்பாக,

2.2.2 -2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாது செயற்படுதல் தொடர்பாக,
இணங்கியொழுகாத வகையில் செயலாற்றப்பட்டுள்ளது என்பதையும்,

	சட்டங்கள்விதிகள் / ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர்	அவதானிப்புகள்
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1.2020 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 9 ஆவது பந்தி நிதி ஒழுங்குவிதி 371(2)(ஆ)	ஏதேனும் விசேட பணிக்காக ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா.100,000 ஆன உச்சவெல்லை வரை மட்டும் கட்டுநிதி வழங்குதல் வேண்டுமாயினும் அதற்கு முரணாக 12 சந்தரப்பங்களில் ரூபா.100,500 தொடக்கம் ரூபா.340,404 ஆன வெல்லைக்குள் மொத்தம் ரூபா.1,788,693 ஆன கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.
(ஆ)	2021 நவம்பர் 26 ஆம் திகதிய 221.03 ஆம் இலக்க அரச கணக்கு திணைக்களத்தின் வழிகாட்டுதலில் 8.1 மற்றும் 8.2 பந்திகள்	2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா.7,659,583,443 ஆன சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் செவ்வைத்தன்மை உறுதிப்படுத்துவதற்கு தேவையான முறையான நிலையான சொத்துக்களின் பதிவேடு பராமரிக்கப்படவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் செயல்படுதல் தொடர்பாக,

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, தேசிய சபையின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும், ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்படவில்லை என்பது தொடர்பாக,

அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 5.3.10(ஆ) வழிகாட்டலின் பிரகாரம், 2023 ஆம் ஆண்டுக்காக துப்பரவேற்பாட்டு சேவை பெற்றுக்கொள்கின்ற பெறுகை செயற்பாட்டில் ஆகக் குறைந்த விலைமனுதாரரிடம் விலைமனுவின் செல்லுபடியான காலப் பகுதியில் ஒப்பந்தம் வழங்குவதற்கு பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்கள் பணியாற்றப்படாமையால், இரண்டாவது விலைமனுதாரரிடம் ஒப்பந்தம் வழங்குதல் காரணமாக ரூபா.2,038,700 ஆன தொகையில் துப்பரவேற்பாட்டு சேவை பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2018 முதல் 2022 வரையான காலப்பகுதியில் அதிகாரசபையின் கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்கு உட்பட்ட 11 பயிற்சி நிலையங்களில் நடத்தப்பட்ட 13 பாடநெறிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிலுனர்களின் இலக்குடன் ஒப்பிடுகையில், சேர்க்கை வீதம் 10 வீதத்திலிருந்து 66 வீதமாக குறைந்துள்ளது. மேலும், அந்த கற்கைநெறிகளிலிருந்து வெளியேறும் சதவீதம் 20 சதவீதத்தில் இருந்து 58 சதவீதமாக இருந்ததால், அந்தக் கற்கைநெறிகளை கைவிடுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான தீர்வுகளை வழங்குவதற்கு நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) துறைசார் அபிவிருத்தித் திட்டத்தின் (SSDP) நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் 03 தொழிற்பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில், ஆலோசகர் கம்பெனிகளிடம் ரூ.1,212,570 செலுத்தப்பட்ட போதும், குறித்த நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை 2023 ஆம் ஆண்டு யூலை வரை தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக மேற்கொண்ட செலவினம் சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கலாக காணப்பட்டது

(இ) ஹம்பாந்தோட்டை மிரிஜ்ஜவில தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தில் 2017 ஆம் ஆண்டின் நிருமாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்தளங்களின் கட்டிடம் பொருட்டு செலவழிக்கப்பட்ட ரூபா 19,053,095 தொகையானது 2017 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்கின்ற வேலை கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தகாரரால் நிர்மாணிப்பு பணிகளை இடைநடுவில் நிறுத்தியமையினால், கட்டிடத்தில் நிருமாணிக்கப்பட்ட பகுதிகள் இடிபாடுகளுடன் காணப்பட்டது.

(ஈ) அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளராக பதவி வகித்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் வரை காலப்பகுதியில் மத்திய கலாச்சார நிதியத்தின் முனைப்பான பணிப்பாளராக கடமையாற்றி, இரண்டு நிறுவனங்களிடமிருந்தும் கொடுப்பனவுகள் மற்றும் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும், குறித்த காலப்பகுதியில் மத்திய கலாச்சார நிதியத்திலிருந்து மாதாந்த கொடுப்பனவாக ரூபா.5,443,723. தொகை பெற்றுக்கொண்டுள்ளதால், அது தொடர்பாக விசாரணை நடாத்துமாறும் 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 ஆம் திகதிய கடிதம் மூலம் மத்திய கலாச்சார நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தால் அதிகார சபையின் தலைவரிடம் அறிவிக்கப்பட்டிருப்பினும் அந்த விசாரணை 2023 யூலை 30 ஆம் திகதியிலும் மேற்கொள்ளப்படவில்லை.

(உ) ஒருகொடவத்தை இலங்கை தொழில்சார் பயிற்சி நிறுவனம் பொருட்டு 2020 ஆம் ஆண்டில் கொரிய நாட்டு நன்கொடையின் கீழ் 100 மாணவர்களுக்கு அணமித்த எண்ணிக்கையின் பொருட்டு தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு முடியுமான வகையில் 48 அறைகளைக்கொண்ட எல்லா வசதிகளுடனும் கூடிய மாணவர் தங்குமிடம் நிருமாணிக்கப்பட்டிருப்பினும், கணக்காய்வு திகதியான ஜுன் 2023 யூன் 30 ஆம் திகதியிலும் முழுநேரகால கற்கைநெறிகளை கற்கின்ற மாணவர்களின் பொருட்டு வதிவிட வசதிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், 14 ஆலோசகர்கள் பொருட்டு தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. அதேபோன்று 2022.2023 ஆம் ஆண்டில் கற்கைநெறியுடன் தொடர்புபட்ட 400 மாணவர்களில் 100 மாணவர்களுக்கு அணமித்த எண்ணிக்கையினர் பயிற்சி நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ள மேல்மாகாணத்தை சாராத வெளி மாவட்டங்களை நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள மாணவர்களாவதுடன், அத்தகைய மாணவர்களுக்கு சலுகை அளிப்பதன் மூலம் தொழில்சார் கல்வியில் மாணவர்களின் ஈடுபாடு அதிகரிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், வெளிநாட்டு உதவிகளை (கடன்கள்) உபயோகப்படுத்தி மேற்கொள்கின்ற இந்தக் கட்டிடம் 03 ஆண்டுகள் தொடக்கம் குறித்த நோக்கத்திற்கும் பயன்படுத்தாது குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஊ) அஹங்கம ஹோட்டல் கல்லூரி, தொழில்சார் பயிற்சி அதிகாரசபையின் கற்கைநெறிகளை பயிலும் மாணவர்களின் மேலதிக பயிற்சிக்காகவும் சிறந்த பயிற்சியை வழங்கும் நோக்கத்திற்காகவும் ரூ. 2019 ஆம் ஆண்டு 148.92 மில்லியன் செலவில் ஒரு ஹோட்டலாக நவீனப்படுத்தப்பட்ட போதிலும், அவ்வாண்டு தொடக்கம் 2023 யூன் 30 வரை எந்தவொரு பயிலுநருக்கும் செய்முறைப் பயிற்சி வழங்கப்படவில்லை.

(எ) அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் காரைநகர் ஹோட்டல் பாடசாலை வளாகத்தில், அதிகார சபையின் நோக்கங்களுக்கு முரணாக சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கும் நோக்கத்துடன் ரூபா.91,026,186 ரூபா செலவிடப்பட்டு நிருமாணிக்கப்பட்ட 22 அறைகளை 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆம் திகதியிலும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

(ஏ) 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சேவையிலிருந்து விலகிய 35 அலுவலர்களிடமிருந்து அதிகார சபையிடம் அறவிடப்பட வேண்டிய 20,246,792 ஆன தொகை 2023 ஆம் ஆண்டு யூலை 26 ஆம் திகதியிலும் அறிவிடப்படவில்லை.

(ஐ) 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதிகார சபையிடம் 03 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய மொத்தம் ரூபா.5,512,969 ஆன மீதி 10 ஆண்டுகள் விஞ்சி இருப்பினும், 2023 மே மாதம் 31 ஆம் திகதியிலும் அறவிடுவதற்கு இயலாதிருந்தது.

(ஒ) நுவரெலியா வனராஜாவத்தை கிராமிய தொழிற்பயிற்சி நிலையம் அமைந்துள்ள காணியில் ரூட் 3 பேர்ச்சஸ் 31.1 காணியை அதிகாரசபைக்கு கையகப்படுத்துவதற்காக காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் 2018 ஏப்ரல் 25 ஆம் திகதி செலுத்தப்பட்ட ரூபா 9,280,000 தொகையும் மேற்படி முற்பணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், காணியின் செவ்வைத்தன்மை தொடர்பாக கவனத்தில் கொள்ளாது இந்தப் பணத்தொகை செலுத்தப்பட்டுள்ளதால் 5 ஆண்டுகளுக்குப் பின்னரும், நிலத்தின் உரிமையை அதிகார சபையிடம் கையகப்படுத்தவதற்கோ செலுத்திய பணத் தொகை மீட்டெடுக்கவோ முடியாதிருந்தது.

(ஓ) ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி கருத்திட்டத்தின் நோக்கத்திற்கு முரணாக கணினி கற்கைநெறி பொருட்டு ரூபா.11,721,081 செலவிடப்பட்டு 30 கணினிகளும் கணினி துணைக் கருவிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஔ) இலங்கை தொழில்பயறிசி அதிகார சபையின் முழு (100 வீதத்திலான) பங்கு உரிமையுடன் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் 18 ஆம் திகதி அமைச்சரவை அனுமதியின்றி அதிகார சபையின் நிதியத்திலிருந்து ஏவுயு ர்ழடனபௌ டுவன என்ற பெயரில் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பெனிகள் பதிவாளர் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், கம்பெனியை கலைப்பதற்கு தேவையான ஆவணங்கள் 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆம் திகதி கம்பெனிகள் பதிவாளர் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. கம்பெனியின் வங்கி கணக்குகள் மற்றும் தொழில்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை தயாரித்து தருமாறு அமைச்சின் செயலாளரால் ஆலோசனை வழங்கப்படினும், அந்த அறிக்கை 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆம் திகதியிலும் தயாரிக்கப்படவில்லை.

(க) 13 ஆண்டுகளிலான தொடர்ச்சியான கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக 2019 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு கட்டளைகள் மேற்கொள்ளப்பட்ட மொத்தம் ரூபா.28,078,556 மதிப்பிலான 19 வகையான உபகரணங்கள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியிலும், வழங்குநர்களால் அதிகார சபையிடம் வழங்கப்படவில்லை. மேலும், 2019 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதிகார சபையால் கொள்வனவு கட்டளைகள் மேற்கொள்ளப்பட்டு அதிகார சபையிடம் கிடைக்கப்பெற்றிருந்த உபகரணங்களில் ரூபா. 4,589,944 மதிப்புள்ள 07 வகையான பொருட்கள் விவரக்குறிப்புகளுக்கு இணங்காத காரணத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த பொருட்கள் டிசம்பர் 31 ஆம் திகதியிலும் மீண்டும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

டப்ளியூ.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் பிற சட்ட ஒழுங்குமுறை தேவைகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் தலைமை கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் அறிக்கை

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிரயாங்களுக்கான அடிப்படை

((அ) இந்த 28 காணிகள் தொடர்பில், கையகப்படுத்தப்பட்டுள்ள 24 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் கையகப்படுத்தப்படாத காணிகளில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிடாத காரணத்தினால், நிறுவனத்தின் மூலம் நியமிக்கப்பட்ட குழுவினால் பெறுமதி மதிப்பிட்டு, கணக்குகளின் சீர்செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

(ஆ) இன்றளவில் சரி செய்யப்பட்டுள்ளது.

(இ) 2023 ஆம் ஆண்டில் சரி செய்யப்பட்டது.

(ஈ) 2023 ஆம் ஆண்டில் சரி செய்யப்பட்டது.

(எ) இன்றளவில் சரி செய்யப்பட்டுள்ளது.

(ஏ) நான் 2023 ஆம் ஆண்டு முதல் அதைச் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன்.

(ஊ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் சான்றிதழ் வழங்குவதற்கான கட்டணத்தை ரூபா.20 இருந்து ரூபா.500 வரை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான விலைப்பட்டியல்கள் (இன்வொய்ஸ்) 2023.01.18 அம் திகதி அதிகாரசபைக்கு கிடைக்கப்பட்டது. இன்றளவிலும் கூட இந்த விலை உயர்வுகளுக்கு எந்த இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என்பதுடன் 2022 ஆம் ஆண்டுக்கு இதற்கான எந்த ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் வரவிருக்கும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் ஒதுக்கீடுகள் மூலம் இந்த கட்டணங்களை செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

விபரம்	வித்தியாசம் ரூபா	காரணம்
Nipunatha Sisu saviya	11,872,000.00	2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற நிதி என்பதுடன் ஆதாரங்களை முன்வைக்க நடவடிக்கை எடுப்பேன்.
Staff incentive	646,945.00	ஆதாரங்களை முன்வைக்க நடவடிக்கை எடுப்பேன்
Ministry SFIG	371,661.00	ஆதாரங்களை முன்வைக்க நடவடிக்கை எடுப்பேன்
Skill work TVEC	374,325.00	ஆதாரங்கள் முன்வைக்கப் பட்டுள்ளது.
மூலதனச் செலவு	13,266,934.00	
13 Years	5,769,800.00	முந்திய ஆண்டுகளின் கிடைக்கப்பெற்ற நிதி என்பதுடன் ஆதாரங்கள் முன்வைக்க பட்டுள்ளது.
Early child Hood	12,862,691.29	முந்திய ஆண்டுகளின் கிடைக்கப்பெற்ற நிதி என்பதுடன் ஆதாரங்களை எதிர்காலத்தில் முன்வைக்க நடவடிக்கை எடுப்பேன்.
	18,632,491.29	

(ஒ) விசேட செயற்றிட்டங்கள் மூலம் மேற்கொள்வதற்காக தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு பல்வேறு நிறுவனங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற பணம் ஒவ்வொரு செயற்றிட்டத்தின் கீழ் தனித்தனி லெஜ்ஜர் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இறுதிக் கணக்குகளில் செயற்றிட்டங்களின் கீழ் செலுத்த வேண்டிய பணமாகக் காட்டப்படுவது சரியானது.

(ஓ) 2022 ஆம் ஆண்டிற்கான இறுதி நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது மற்றும் ஆண்டு இறுதி மாதாந்திர வங்கி ஒப்பீட்டு அறிக்கைகளைத் தயாரிக்கும் போது கண்டறியப்பட்ட பிரகாரம் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்ட பெறுமதிகளுக்கான ரசீதுகளை உள்ளிடும் வேளையில் தவறுதலாக ரசீதுகளின் உள்ளீட்டை இரண்டு முறை உள்ளிடுதல் மூலம் ஏற்பட்ட பிழையை சரி செய்வமற்கு நேரிட்டது. இங்கு நடைமுறையில் கணக்கியல் பயன்பாடுகளினுள் பணம் புத்தகத்தில் ஜர்னல் உள்ளீடுகள் உள்ளிடப்படாததால், மேற்படி இரண்டுமுறை உள்ளிடல் பிழையைச் சரிசெய்வதற்கு பணிப்பாளர் (நிதி) அவர்களின் அங்கீகாரத்துடன் அவ்வாறு மேலதிகமாக உள்ளிடப்பட்ட ரசீதுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

மற்ற திருத்தங்களும் கணக்குகளை சரிசெய்வதற்காக செய்யப்பட்ட திருத்தங்கள் என்பதுடன் கணக்கு முறைமைக்கு தரவுகளை உள்ளிடப்படும் சந்தர்ப்பங்களில், அந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பில் குறிப்பு வைக்க வேண்டிய கணக்குகள் பற்றி சரியாகவும் முழுமையாகவும் அடையாளம் காணுதல் சில சந்தர்ப்பங்களில் நடைமுறை சிக்கல்கள் காணப்படுவதும் பின்னர் அவைகளின் சரிசெய்தலுக்காக ஜர்னல் குறிப்புக்கள் உள்ளிடுதல்களின் காரணமாக லெட்ஜர் கணக்குகளில் ஏற்படக்கூடிய தரவின் சிக்கலைக் குறைக்க, தொடர்புடைய ஆரம்ப பதிவின் மூலம் சீர்திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், கணக்காய்வு அறிக்கைகள் மூலம் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்திய பின்னர், இதுவரை காணப்பட்ட கணக்கு முறைமை பயன்படுத்தப்படும் நிருவாக வழிமுறைகளை மேலும் மீளாய்வு செய்வதற்கு பல்வேறு வரையறைகளுக்கு உட்பட்டு மேலே குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படாதவாறு அங்கீகாரங்கள் மற்றும் எழுத்துச் சான்றுகளுடன் கணக்கியல் முறைமைக்குள் தேவையான பிழைகளை சரிசெய்யும் புதிய வழிமுறையொன்றை தயாரித்து அதை பின்பற்றுமாறு அனைத்து கணக்கு முறைமை பயன்படுத்தும் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதென பணிவுடன் அறியத்தருகின்றேன்.

2.2.2

(அ) அதிகபட்ச வரைறையைக்கு உட்பட்டு நடவடிக்கை எடுப்பேன்.
(ஆ) நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

2.2.4 கொள்முதல் செயல்முறையின்படி, 2022.09.21 திகதி அளவில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மூலம் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த Express Environmental Service நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. 2022.09.15 திகதி திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவர் ராஜினாமா செய்ததால், புதிய சேவை வழங்குநரைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை. இது குறித்து 2022.09.26 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு, திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவராக அமைச்சின் பிரதிநிதி ஒருவரை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. 2022.10.12 ஆம் திகதி நிறுவனத்திற்கு புதிய தலைவர் வந்தவுடன் இந்தக் கோப்பு, மேற்படி தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறு வந்த தலைவரை திணைக்கள கொள்முதல் குழுவுக்கு நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருப்பது 2022.11.22 ஆம் திகதியாகும். அதன்படி திணைக்கள கொள்முதல் குழு மூலம் இந்த குறித்த வேலைக்குரிய கோப்பு ஆராயப்பட்டு அதன் பின்னர் 2022.12.16 ஆம் திகதி கொள்முதல் குழுவின் தீர்மானமாக, Express Environmental Service நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஒரு நாள் மட்டும் தாமதமாக வழங்கப்பட்ட கொள்முதல் குழுவின் முடிவு தொடர்பாக அந்த நிறுவனத்தினால் சேவைக் கட்டளை ஏற்க மறுக்கப்பட்டுள்ள காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. விலைமனு செல்லுபடியாகும் காலத்திற்குள் இந்த நிலைமை ஏற்படுவதற்கு காரணமாக அமைந்திருப்பது புதிய தலைவரின் வருகை, அமைச்சினால் மேற்படி தலைவரை கொள்முதல் குழுவிற்கு நியமித்தல் மற்றும் இந்தக் கோப்பினை ஆராய்வதற்கு கணிசமான காலம் செலவழித்தமை ஆகியவைகளாகும்.

2.3 ஏனைய விடயங்கள்:-

(அ) கோவிட் 19 தொற்றுநோயால் நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக சாதாரண பயிற்சி நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 08 மாதங்கள், 9 மாதங்கள் ஆகிய பாடநெறி காலம் 16-18 மாதங்களாக நீட்டிக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் குழுக்களின் எண்ணிக்கைகளும் ஒப்பீட்டளவில் குறைக்கப்பட்டது. அதன்படி, ஆட்சேர்ப்பு சதவீதமும் குறைந்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம தொழிற் பயிற்சி நிலையத்தில் 2018 ஆம் ஆண்டில் குளிரூட்டல் மற்றும் வளிசீராக்கி தொழில்நுட்பப் பாடநெறி நடாத்தப்படவில்லை. அதன் ஆட்சேர்ப்பு சதவீதம் 10% எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் கொத்தடுவை தொழிற் பயிற்சி நிலையத்தில் அலுமினிய வடிவமைப்பாளர் மற்றும் கட்டிட மர தொழில்நுட்ப வல்லுநர் ஆகிய இரண்டு பாடநெறிகளும் நடத்தப்படவில்லை. அதன்படி, ஆட்சேர்ப்பு சதவீதம் வழங்கப்பட்ட தகவலைப் பொறுத்து மாறுபடும்.

பாதேகம மற்றும் தோட்டகம தொழிற் பயிற்சி நிலையங்கள் இந்த மாவட்டத்தில் உள்ள நிலையங்கள் அல்ல. பஹத்கம நிலையத்தில் நீர்க்குழாய் மற்றும் சோலா முறைமை தொழில்நுட்ப பாடநெறிகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த அனைத்து காரணிகளின் காரணமாக, சுட்டிக்காட்டப்பட்ட ஆட்சேர்ப்பு சதவீதம் மாறுபடும்.

(ஆ) துறைசார் திறன் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் **(SSDP)** நிதி ஒதுக்கீட்டின் கீழ் பயிற்சி நிலையங்கள் 90 நவீனமயப்படுத்தப்பட்டு மேம்படுத்துவதற்கு தேவையான பொறியியல் வடிவமைப்பு மற்றும் அளவு விபரப் பத்திரம் தயாரிப்பதற்கு, 2014 ஆம் ஆண்டில் தேசிய போட்டி முறையின் கீழ் ஆலோசனை சேவையாக தேர்ந்தெடுக்கப்பட்ட **(Engineering & Design & Construction Company (ED & CC)** நிறுவனத்திற்கு 2014.09.09 ஆம் திகதி ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 2014.12.29 ஆம் திகதிய மேலதிக செயலாளரின் (துறைசார் திறன் அபிவிருத்தி) கடித்தில் உள்ள ஆலோசனையின் படி அச் சேவையை நிறுத்துவதற்கு நேரிட்டாலும் அன்றளவில் வடிவமைப்பு மற்றம் அளவு விபரப் பத்திரம் தயாரிக்கப்பட்டு எம்மிடம் வழங்கப்பட்ட 35 பயிற்சி நிலையங்களுக்குள் மேற்படி 3 பயிற்சி நிலையங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், அதன் பின்னர் **SSDP** மூலம் ஒவ்வொரு ஆண்டிலும் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் அந்த 3 நிலையங்களின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க முடியாதுப் போனது. ஆனால் வழங்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு (அளவு விபரப் பத்திரம்) முன் வருங்காலத்தில் உபயோகப்படுத்துவதற்காக எம்வசம் உள்ளது.
மேலும், இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் ஏனைய அங்கத்தவர்களின் தீர்மானத்தின் படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட உள்ளது.

(இ) இந்த செயற்றிட்டம் ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சமாந்தரமாக, துறைமுக செயற்பாடுகளுக்குத் தேவையான பெருமளவிலான திறமையான பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கும் நோக்குடன் மிரிஜ்ஜவில தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தின் பயிற்சித் திறனை அதிகரிப்பதற்காக திறைசேரி நிதியின் கீழ் 2013.11.07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் 2014.05.04 ஆம் திகதி நிறைவடைய திட்டமிடப்பட்டிருந்தது. ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான காரணங்களுக்காக கூடுதலாக 35 நாட்கள் அவகாசம் அளித்து 2014.06.13 ஆம் திகதி முடிவடையத் திட்டமிடப்பட்டது. ஆனால், ஒப்பந்ததாரரின் பலவீனமான செயலாற்றுகை காரணமாக கட்டுமானப் பணிகளை அன்றைய தினம் முடிக்க முடியாததால், 2015.01.05 ஆம் திகதி செயற்றிட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. பின்னர் முதலாவது மாடி கொன்கிரீட் மட்டம் வரை கட்டிடம் பரிசோதிக்கப்பட்டு பொறுப்பேற்கப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்த நிறுவனம் வழங்கிய ரூபா 2,130,677.83 பெறுமதியான செயலாற்றுகை பிணைமுறிப் பத்திரம் பணமாக மாற்றப்பட்டு 2015.02.02 ஆம் திகதிய 573628 கொண்ட காசோலை இலங்கை வங்கி காசோலை மூலம் எமது அதிகார சபையின் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இதற்க மேலதிகமாக

CIDA (ICTAD) ஒப்பந்த விதிமுறைகளின்படி மீதமுள்ள பணிகளுக்கு 25% வீத மிகைப்பணம் அதாவது ரூபா. 6,022,990.72 கூடுதல் கட்டணம் அறவிட்டு, இறுதி கட்டணப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் 2015.08.25 ஆம் திகதி மேற்கொண்டு பணிக்கான ஆலோசனை கோரி கொள்முதல் குழுவிடம் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2015.11.23 ஆம் திகதியும் மீண்டும் திணைக்களத் கொள்முதல் குழுவிடம் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இதற்கு கொள்முதல் குழுவினால் உரிய தீர்மானம் ஒன்று வழங்கப்படவில்லை. 2016 ஆம் ஆண்டு மீண்டு ஒருமுறை இந்த செயற்றிட்டத்தின் மீதமுள்ள கட்டுமானத்தை முடிக்க கொள்முதல் செற்பாடுகள் நடைபெற்ற போதிலும் முந்திய செயற்றிட்டம் முறையாக முடிக்கப்படாததால் (கொள்முதல் குழுவின் தீர்மானம் பெறப்படாததால்) மீண்டும் கட்டுமானத்திற்கு கொள்முதல் குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்படவில்லை. இதனால் இதுவரையில் இந்த கட்டிடத்தின் மீதமுள்ள வேலைகள் நிறைவுசெய்ய முடியாதுப் போகியள்ளதுடன் இந்த செலவு இதுவரை செய்யப்பட்டுவரும் வேலைகளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பின்னர் 2022 ஆம் ஆண்டில், கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் அறிவுறுத்தல்களின்படி, இந்த கட்டிடங்களின் உறுதிப்பாடு மற்றும் குறைபாடுகளை சரிபார்த்து, அறிக்கையொன்றை பெறும் பொருட்டு, தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (NERD) செய்யப்பட்ட கோரிக்கையின்படி அந்த நிறுவனத்தினால் அடிப்படை பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு இந்தக் கட்டிடத்தை அணுசக்தி சபை மூலம் பரிசோதித்து, அறிக்கை ஒன்ற பெறப்பட வேண்டும் என அறவிக்கப்பட்டது. இற்காக அணுசக்த்தி சபையில் இருந்து கொண்டு வரப்பட்ட மதிப்பீட்டில் செய்யப்பட வேண்டிய பரிசோதனைகளுக்கு ஒரு அலகுக்கான விலை மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் முழுமையான மதிப்பீட்டை வழங்கும் பொருட்டு இடப் பரிசோதனை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளதுடன் இன்றளவில் இந்த செயற்றிட்டத்தின் கொடுப்பணவு செலுத்தல் சம்பந்தமாக கட்டுமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட விளக்கங்களைக் கருத்தில் கொண்டு இறுதிக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கான பரிந்துரைகளைப் பெறுவதற்காக 2023.05.09 ஆம் திகதி விசேட தொழிநுட்பக் குழுவொன்ற நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக் குழுவின் அறிக்கையின் பரிந்துரை என்னவெனின் இந்தக் கட்டிடம் NERD நிறுவனம் மற்றும் அணுசக்தி சபையின் பரிசோதனையினால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிகாரம் தேவையான மாற்றங்கள் மற்றும் சேர்த்தல்களுடன் II இரண்டாம் மாடியையும் அமைத்து பயன்படுத்துவதாகும். அதன்படி தேவையான நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு இக்கட்டடத்தை பயனுள்ளதாக பயிற்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மேலும், மேற்கூறிய பொறியியல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, செயற்றிட்டம் நிறுத்தப்படும்போது, அதிகார சபையினால் ரூபா.845,226.51 தொகை பணம் குறித்த ஒப்பந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டும். இந்தக் கட்டிடங்கள் தொடர்பாக NERD நிறுவனம் மற்றும் அணுசக்தி சபையின் அறிக்கைகளைப் பெற்ற பிறகு, அறிக்கையில் உள்ள விடயங்களையும் கருத்தில் கொண்டு, ஒப்பந்தக்காரரிடமிருந்து ஏதேனும் அறவீடுகள் இருந்தால், அதற்கு காப்பாக இந்தத் தொகையை தற்காலிகமாக நிறுத்திவைத்து, அதன் பின்னர் செலுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

(ஈ) 2023.09.08 ஆம் திகதி நடைபெற்ற பொது விடயங்கள் தொடர்பான குழுவில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, இது தொடர்பாக ஜனாதிபதி செயலாளரிடம் வினவப்பட்டு 2023.04.19 ஆம் திகதிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்கு ஜனாதிபதியின் செயலாளர் மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி பரிந்துரைகளை ஜனாதிபதி செயலாளரிடம் முன்வைக்குமாறு 2023.07.12 ஆம் திகதிய கடிதம் ஊடாக எமது அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்திற்க குறித்த கலந்துரையாடலுக்காக திகதி, நேரம் மற்றும் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து அனுப்புமாறு 2023.08.31 திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) ஒருகொடவத்த கொரிய தேசிய தொழிற்பயிற்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களில் வதிவிடக் கட்டுப்பாட்டாளர் பதவிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், அதற்கான ஆட்சேர்ப்பு எதுவும் செய்யப்படவில்லை. எனவே பயிற்சி பெறுபவர்களுக்கு வதிவிட வசதிகள் வழங்கப்படவில்லை. தற்போது, ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் ஆட்சேர்ப்புக்கான அனுமதியைப் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளோம். இதுவரை, இந்த நிறுவனம் மாதாந்திர கொடுப்பனவு ஒன்றை அறவிட்டு ஆலோசகர்களுக்கு வதிவிட வசதிகளை அளித்து வருகிறது.

(ஊ) அஹங்கம ஹோட்டலை திறம்பட பயன்படுத்துவதற்கு இலங்கை ஹோட்டல் சுற்றுலா மற்றும் முகாமைத்துவ நிறுவனத்துடன் (SLITHM) ஹோட்டல் பாடசாலையின் சொத்துக்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்காக ஏற்கனவே கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதன்படி ஹோட்டல் SLITHM நிறுவனத்துடன் அவதானிக்கப்பட்டது. அந்த அவதானிப்பின் போது, இந்த நிறுவனம் பாடத்திட்டங்களின் பாடவிதானங்களை விருத்தி செய்வதற்கும், பயிலுநர்களுக்கு மேலும் பயிற்சி அளிப்பதற்கும், இணங்கியதுடன் 2019 இல் புதுப்பிக்கப்பட்டாலும், அதை ஹோட்டலாகப் பராமரிக்க தேவையான விடயங்கள் புதுப்பிக்கப்படவில்லை என்பது அடையாளம் காணப்பட்டது. எனவே, மேலும் அதிகமாக பயிற்சி பெறுபவர்களுக்கு பயிற்சி அளிக்கும் ஹோட்டலாக பராமரிக்க இணக்கம் தெரிவிக்கப்படவில்லை. ஆகையால், இது தொடர்பாக எமது அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு அறிவித்ததுடன் பணிப்பாளர் சபை இந்த ஹோட்டலை கொள்முதல் வழிமுறைகனளை பின்பற்றி சட்டப்பூர்வமாக தனியார் அல்லது அரசப் பிரிவின் நிறுவனமொன்றுக்கு நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கும், அதற்காக கொள்முதல் வழிமுறைகளை பின்பற்றி முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்கும், ஆலோசனை வழங்கி அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேலும் உரிய குத்தகையாளர் மூலம் எமது பயிலுநர்களை மேலதிக பயிற்சிகளுக்காக இணைத்துக்கொள்ள வேண்டும் குத்தகை ஒப்பந்தங்களில் குறிப்பிட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ) பொத்துவில் மற்றும் காரைநகர் ஹோட்டல் பாடசாலைகளுக்கும் மேலே (C) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி முறைப்படி குத்தகைக்கு வழங்கப்பட உள்ளது.

(ஏ) இந்த அறவீட்டை பெறுவதற்கு ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் ரூபா.5000க்கும் குறைவான அறவீடுகள் குறித்து, நடுத்தீர்ப்பு சபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதடன் அறவீடுகள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவே இரண்டு அதிகாரிகள் மூலம் பணத்தை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- ரிசீட் இல. HOR 0431
  ஜி.ஜி.பீ.மதுஷான் (2186) 35,682

- ரிசீட் இல. HOR 0431
  ஏ.எம்.ஜெமீல் (1222) 65,206.67

அடுத்து நடைபெறவுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்திற்கு அனுப்புவற்கு நடவடிக்கை எடுப்பேன்.

(ஒ) வனராஜவத்தை காணி, காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமானது என அந்த நிறுவனம் மூலம் அனுப்பப்பட்ட 2013.09.17, 2016.01.12 மற்றும் 2017.08.05 திகதியிட்ட கடிதங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்த காணியை கொள்வனவு செய்வதற்காக ரூபா.9,280,000.00 தொகைப் பணம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட்டது. இதன்படி, இந்த நிலத்தின் உரிமை தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இல. CA writ 307/2018 கொண்ட ஒரு வழக்கு வேறொரு தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காணியின் கையளிப்பு நடவடிக்கையை நிறைவுசெய்ய முடியாதுள்ளது. அந்த வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் அடுத்தகட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒள) இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் 06 பயிற்சி நிலையங்களில் நடாத்திச் செல்லப்பட்ட சிறுவர் பராமரிப்பு பாடநெறிகளில் பயிற்சி பெறுகின்ற பயிலுநர்களின் பயிற்சி நடவடிக்கைகள் மிகவும் உயர் தரத்துடன் நடைமுறைப்படுத்த இலங்கை தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் கீழ் உலக வங்கியின் ஆதரவுடன் 2019.06.28 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன்படி அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, சிறுவர் பராமரிப்பு பாடநெறிகள் பயிலுகின்ற பயிலுநர்களுக்காக 03 கட்டங்களின் கீழ் உலக வங்கியின் உதவியில் ரூபா 50,000.00 தொகை நிதியுதவி வழங்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டில், இன்னும் 04 சிறுவர் பராமரிப்பு பாடநெறிகள் 04 நிலையங்களில் ஆரம்பிப்பதற்கு இடவசதிகள் மற்றும் கேள்வி காணப்பட்டதால் மேற்படி நிதியுதவியின் கீழ் புதிய 04 பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டு அதற்கு தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இதன்படி, 06 மாதங்களுக்கு தலா 80 பயிற்சியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன், அந்த பயிலுநர்களை கற்கைநெறிகளை நிறைவு செய்யும் விகிதாசாரமாக எமக்கு அவ்வப்போது நிதியுதவி கிடைத்துள்ளது. மேலும், ஆரம்பிக்கப்பட்டிருந்த மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சகல சிறுவர் பராமரிப்பு பாடநெறிகளுக்கும் அடையாளம் காணப்பட்ட அனைத்து உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டன, மேலும் ஆரம்பிக்கப்பட்டிருந்த அந்த பாடநெறிகளில் பயிலுநர்களின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தொழில் பயிற்சி அதிகார சபைக்கு நிதியுதவி கிடைத்தது. இதன்படி, சம்பந்தப்பட்ட சிறுவர் பராமரிப்பு பாடநெறிகளுக்கான உபகரணத் தேவைகளை வழங்கிய பின்னர், பின்வரும் காரணங்களின் அடிப்படையில் 30 அத்தியாவசிய கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

மேலும், 2019 ஆம் ஆண்டில், 10 IT தொழிநுட்பவளர் (NVQ Level IV) பாடநெறிகள் தொழில் சந்தையில் அதிக கேள்வி உள்ள கணினி வரைகலை வடிவமைப்பாளர் பாடநெறியாக மாற்றப்பட்டதுடன் அதற்கு தேவையான ஆலோசகர் பயிற்சி மற்றம் வகுப்பறை ஏபாடுகள் போன்ற பிற தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டாலும், திறைசேரியில் ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்டால் அந்த பாடநெறிகளக்க தேவையான கணினி உபகரணங்களை கொள்வனவ செய்வதற்கு 2020 வரை சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

மேலும், 13 வருட தொடர்ச்சியான கல்வித் திட்டத்தின் கீழ், 19 கணினி வரைகலை வடிவமைப்பாளர் பாடநெறிகளை அபிவிருத்தி செய்வதற்கு கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்திருந்தது. ஆனால் அந்த பாடநெறிகளுக்கு தேவையான கணினிகள் கொள்வனவு செய்வதற்கு கேள்விப்பத்திரம் ரத்து செய்யப்பட்டதால் புதிய கணினிகளை கொள்வனவு செய்ய முடியாமல் போகியுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டுகளில் கொரோனா தொற்றுநோய் சூழ்நிலையின் கீழ் பயிற்சி பெற்றவர்களின் பயிற்சி நடவடிக்கைகள் தடைபட்டதால், இந்த பாடநெறிகளின் பயிற்சி நடவடிக்கைகளை தொலைதூ ரக் கல்வி முறையின் கீழ் செயல்படுத்தவும் அமைச்சகம் அறிவுறுத்தல்களை வழங்கியது. போதுமான திறன் கொண்ட புதிய கணினிகள் இல்லாததால் இது தொடர்பில் சிக்கல்நிலை காணப்பட்டது.

எனவே, அச் சந்தர்ப்பத்தில் உலக வங்கியின் உதவியின் கீழ் சிறுவர் பராமரிப்பு பாடநெறிகளை நடாத்துவதற்காக 2019, 2020 ஆம் ஆண்டுகளில் தொழில் பயிற்சி அதிகார சபைக்கு கிடைக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூபா.25,699,700 இல் இருந்து 11 மில்லியன் செலவிடப்பட்டு, 10 கணினி வரைகலை வடிவமைப்பாளர் பாடநெறிகளுக்காக 30 கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டது.

(∴) இந்த நிறுவனம் அமைச்சரவை அனுமதியின்றி நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் இந்த அதிகார சபையின் அதிகாரிகள் குழுவினால் நிருவகிக்கப்படாததால், நிறுவனத்திடம் கணக்குகள் / சொத்துகளின் பதிவுகள் எதுவும் இல்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த சிக்கல் எழுகிற காரணத்தால் மற்றும் நிறுவனத்தை கலைப்பதற்கு நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல் தேவைப்படுமானால் அது குறித்த கவனத்தில் கொண்டு இந்த நிறுவனம் பற்றிய அடிப்படை அறிக்கை ஒன்றை வழங்குவதற்கு குழுவொன்று ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கை எதிர்காலத்தில் அமைச்சின் கணக்காய்வு

மற்றும் முகாமைத்துவக் குழுவுக்கும் நிறுவன கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. 20.06.2022 அன்று, இந்த நிறுவனத்தை கலைக்கத் தேவையான ஆவணங்கள் கம்பனி பதிவாளர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த கலைப்பு செயல்முறையின் முன்னேற்றம் குறித்து கேட்டு இரண்டாவது நினைவூட்டல் கடிதம் 14.07.2023 அன்று கம்பனி பதிவாளர் திணைக்களத்திற்கு அனுப்பப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(க) இந்தப் பயிற்சி உபகரணப் பொருட்களையும் வழங்க முடியதுப் போகியிருப்பது இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக என சம்பந்தப்பட்ட விநியோக முகவர்கள் எழுத்து மூலம் அதிகாரசபைக்கு அறிவித்துள்ளனர். மேலும், சில வழங்குநர்கள் வழங்கிய உபகரணங்கள் இறுதி தொழில்நுட்ப மதிப்பீட்டில் உள்ள விவரக்குறிப்புகளுடன் பொருந்தவில்லை என்ற காரணத்தால் அந்த உபகரணங்கள் பொறுப்பேற்கப்படவில்லை என்பதுடன் அந்த வழங்குநர்களுக்கு சரியான விவரக்குறிப்புகளின்படி பொருட்களை வழங்குமாறு கூறப்பட்டது, ஆனால் நாட்டில் காணப்பட்ட டொலர் நெருக்கடி அடிப்படையில் அந்த உபகரணங்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக உபகரணங்களை வழங்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது அந்த பொருட்களை மீள வாங்குவதற்கு அமைச்சின் செயலாளரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

எயார் வைஸ் மார்ஷல் பிரசன்ன ரணசிங்க (ஓய்வு),
தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி,
இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை.